# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 03 வெள்ளிக்கிழமை (19-07-2002)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:236




கடற்புலிகளின் அணிவகுப்பை ஏற்கும் தலைவர் பிரபா.

## ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சை முடிவுகள் ஓகஸ்ட் 8இல்

கொழும்பு,ஜுலை19

கடந்த ஏப்ரல் மாதம் நடந்த ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சை முடிவுகள் அடுத்த மாதம் 8ஆம் திகதி வெளியிடப்படவிருக்கின்றன என்று பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பரீட்சை ஆணையாளர் நாயகமாக இருக்கும் டபிள்யூ. அமரக்கோன் அடுத்த மாதம் 15ஆம் திகதி ஓய்வு பெற்றுச் செல்லவிருக்கின்றார் என்றும் -

அதற்குமுன்னர் 8ஆம் திகதி முடிவுகள் வெளியிடப்படும் என்றும்- அவர் சொன்னார். (ம-3)

### அமைச்சரவைக் கூட்டங்களுக்கு

## வீடியோ கமெரா பொருத்தப்பட்ட கைப்பையுடன் வரும் ஜனாதிபதி

கொழும்பு,ஜுலை19

அமைச்சரவைக் கூட்டத்துக்கு ஜனாதிபதி எடுத்துவரும் கைப்பை (Hand Bag) குறித்து அமைச்சர் ரவி கருணாநாயக்க சர்ச்சை கிளப்பியிருக்கிறார்.

"ஜனாதிபதியின் கைப்பையில் அதி நவீன ஒலிப்பதிவு சாதனங்கள் அடங்கியிருக்கின்றன. இது எப்படி ஜனாதிபதிக்குக் கிடைத்தது என்பது பற்றிய ஆவணம் ஜனாதிபதி செயலகத்திலிருந்து கிடைத்திருக்கிறது" - என்று கூறிய அமைச்சர் ரவி கருணாநாயக்க, அதை அமைச்சரவையின் நேற்று முன்தின அமர்வில் முன்வைத்தார்.

'வி.எச்.ஏ-9' ரக உயர்தர மினி வீடியோ கமராவுடன் கூடிய கைப்பையை வாங்குவதற்கான நிதி பொலிஸ் திணைக்கள முன்னாள் உயர் அதிகாரியால் செலுத்தப்பட்டது.

லண்டனில் குறிப்பிட்டநபர் ஒருவ

(14 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தநிறுத்த உடன்பாடு திருத்தப்படமாட்டாது!

## அடித்துக் கூறுகின்றார் அமைச்சர் பீரிஸ்

கொழும்பு,ஜுலை19

**அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் அதனடிப்படையிலான யுத்தநிறுத்த உடன்பாட்டிலும் எந்தத் திருத்தமும் செய்யப்படமாட்டது. அதை மீளாய்வு செய்ய வேண்டிய அவசியம் இல்லை.**

**- இப்படி அடித்துக் கூறுகின்றார் அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.**

கிழக்கில் முஸ்லிம்களின் நலனைப் பேணும் வகையில் புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று அமைச்சர் ஹக்கீம் கோரிவரும் நிலையில், அதற்குப் பதில் தரும் வகையில் கருத்து வெளியிட்டிருக்கின்றார் அமைச்சர் பீரிஸ்.

அமைச்சரவைக் கூட்டமுடிவுகளை வெளியிடுவதற்காக நேற்று கொழும்பில் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"அரசு - புலிகள் இரு தரப்பினருடனும் நோர்வே பிரதிநிதிகள் நீண்ட தொடர் பேச்சுக்கள் மற்றும் கலந்தாலோசனைகளை நடத்திய பின்னரே இந்த உடன்படிக்கை தயாரானது.

அதன் பின்பே அதில் கையொப்பமிடப்பட்டது. அதுவே இறுதியானதும் உறுதியானதுமாகும்' - என்றும் அமைச்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுங்குளம் கரையோரத்தில் மீளக்குடியமர அனுமதியில்லை

யாழ்ப்பாணம்,ஜுலை19

கொழும்புத்துறை கிழக்கு, நெடுங்குளத்தில் கடற்கரையை அண்டிய பிரதேசத்தில் மக்கள் மீளக் குடியமர படையினர் அனுமதி மறுத்துள்ளனர்.

யாழ்ஞானம்ஸ் ரோட்டலில் உள்ள 512 ஆவது பிரிகேட்டில் நேற்று நடந்த சந்திப்பிலேயே படையினர் இப்படித் தெரிவித்துள்ளனர்.

பொது அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் மேற்படி சந்திப்பில் கலந்துகொண்டனர்.

கொழும்புத்துறை கிழக்கில் நெடுங்குளம் பகுதியில் ஜே-61, ஜே-62 கிராம சேவையாளர் பிரிவுகளில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்க வேண்டும் என்று சந்திப்பின் போது கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா வளாக மாணவர்கள் நகரில் வீதி மறியற்போராட்டம்

யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்கள் நேற்றுக் காலை 9.30 மணியளவில் வவுனியா நகரப் பகுதியில் வீதிமறியறபோராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் நகரில் இடைக்கிடையே வாகன நெரிசல் ஏற்பட்டது.

வவுனியா வளாக பிரயோக விஞ்ஞான பீட மாணவர்கள் 7 அம்சக் கோரிக்கையை முன்வைத்து கடந்த 15 ஆம் திகதிமுதல் வகுப்புப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் நேற்றுமுன்தினம் வளாகத்துக்குச் சென்று மாணவர்களின் நிலையை ஆராய்ந்தார். நிதி சம்பந்தப்பட்ட சில பிரச்சினைகள் இருப்பதால் அவை குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொள்ளப்படும் என்று அரச அதிபர் உறுதியளித்திருக்கிறார்.

நூற்றுக்கணக்கான மாணவர்கள் மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களுக்கு ஆதரவாக வவுனியா வளாக வியாபார கற்கைநெறி மாணவர்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## செம்மணன் தாக்கப்பட்ட இடத்தை ஆணைக்குழு சென்று பார்த்தது!

### இன்று கடைசி அமர்வு விசாரணை

யாழ்ப்பாணம்,ஜுலை19

விடுதலைப் புலிகளின் தீவக அரசியல் பொறுப்பாளர் செம்மணன் மற்றும் தயாளன் ஆகியோர் தாக்கப்பட்ட இடத்தை சுயாதீன ஆணைக்குழுவினர் நேற்று மாலை வேலணைக்குச் சென்று பார்வையிட்டனர்.

அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடி விவரங்களைக் கேட்டறிந்த ஆணைக்குழுவினர், பின்னர் கடற்படை முகாமுக்கும் சென்றனர்.

நேற்றுக் காலை செயலகத்தில் நடந்த விசாரணைகளின்போது தாக்குதலுக்கு இலக்கான தயாளன் மற்றும் விடுதலைப் புலிகளுடன் சுமுகமாக நடந்துகொள்ளாத காரணத்தால் இடமாற்றம் செய்யப்பட்ட ஊர்காவற்றுறை கடற்படை கட்டளை அதிகாரி லெப்.கொமாண்டர் சந்திரசிறி, கடற்படை அதிகாரியான வியனாராட்சி ஆகியோர் சாட்சியமளித்தனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ ஆயுதக் களஞ்சியம் முகமாலையில் வெடித்துச் சிதறியது

கொழும்பு,ஜுலை19

முகமாலை இராணுவ முகாம் பகுதியில் உள்ள ஆயுதக் களஞ்சியத்தில் திடீரென ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாக அங்கு இருந்த ஆயுதங்கள் வெடித்துச் சிதறின என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆயுதக் களஞ்சியத்தில் இருந்த ரி-56 ரக துப்பாக்கிகள் - 10, கைக்குண்டுகள் - 40, மோட்டார் குண்டுகள் - 60, 60 எம்.எம். மோட்டார் குண்டுகள் ஒரு தொகுதி, பெருமளவு ரவைகள் என்பன எரிந்து நாசமானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தீ விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை என்றும் - இது தொடர்பான விசாரணைகள் இடம்பெறுகின்றன என்றும் - இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

### ஏப்ரலில் ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சை எழுதியோருக்கு

## 'இசற்' முறைப்படியே பல்கலைக்கழக அனுமதி


கொழும்பு,ஜுலை19

கடந்த ஏப்ரல் மாதம் நடந்த ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சைப் பெறுபேறுகளின் படி 'இசற்' முறைப்படியே பல்கலைக்கழக அனுமதியை வழங்குவதென பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு முடிவுசெய்துள்ளது.

கடந்த ஓகஸ்டில் நடந்த பரீட்சையின்போது இந்த முறை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. அப்போது இதற்கு எதிராகக் குரல் எழுப்பப்பட்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் புதிய ஜனாதிபதி அப்துல் கலாம்



புதுடில்லி,ஜுலை19

இந்தியாவின் 12ஆவது ஜனாதிபதியாக பிரபல ஏவுகணைத் தொழில்நுட்ப விஞ்ஞானி டாக்டர் அப்துல் கலாம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட கப்டன் லஷ்மி சாதலை விட 3இலட்சத்து 693 வாக்குகள் அதிகமாகப்

(14 ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதி செயலகத்துக்கான

# வாகனக் கொள்வனவில் மோசடி; அமைச்சரவை உபகுழு அறிக்கை

கொழும்பு,ஜுலை19

ஜனாதிபதி செயலகத்தில் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் சொகுசுக்கார்கள் கொள்முதல் மோசடியுடன் தொடர்புடைய தனியார் நிறுவனம் இனங்காணப்பட்டிருக்கிறது. றப்பர் தொழிற்சாலைக்குத் தரம் குறைந்த இயந்திரங்களை இறக்குமதி செய்துகொடுத்து மோசடியில் ஈடுபட்டதாக ஏற்கனவே குற்றஞ்சுமத்தப்பட்டு ஒதுக்கிவைக்கப்பட்ட 'ஆர். ஆர்.நவக்ரீன்' என்ற நிறுவனமே இவ்விடயத்திலும் சம்பந்தப்பட்டிருக்கிறது.

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் நேற்றுக் கூறினார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டம் பற்றி விளக்கமளிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரச்சினைக்குரிய - மேற்குறிப்பிட்ட நிறுவனத்திடம் எந்தவிதமான கேள்விப்பத்திரமும் கோராமல் இத்தகைய பெருந்தொகைக் கொள்வனவு மேற்கொள்வதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் அளித்தது யார்?

கடந்த அரசின் அமைச்சரவை மேற்படி கொள்வனவுக்கு 6கோடி 40லட்சம் ரூபா வழங்குவதற்கே அங்கீகாரம் வழங்கியது. இருந்தபோதும் 246 கோடி 90 லட்சம் ரூபாவுக்கு வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கிறது. இது எப்படி - என்று அமைச்சரவையில் பரிசீலிக்கப்பட்டது.

சொகுசு வாகனங்கள் இறக்குமதி மோசடி தொடர்பாக ஆராய்வதற்கு அமைச்சர் சொக்ஸி தலைமையில் நியமிக்கப்பட்ட - அமைச்சர்கள்

(14 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# விளையாட்டு

## வீரர்களின் துடுப்பாட்டம் இன்று பிற்பகல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை19

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் இடையிலான வீரர்களின் மாபெரும் துடுப்பாட்டப் போர் இன்று பிற்பகல் ஆரம்பமாகும். தொடர்ந்து நாளையும் நடைபெறும். ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெறவுள்ளது.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இந்தப்போட்டியில் தெரிவாகும் சிறந்த வீரர்களுக்கான பரிசில்களை 'உதயன்' நிறுவனம் வழங்குகிறது.

சிறந்த துடுப்பாட்ட வீரர், பந்து வீச்சாளர், சகல துறை வீரர், ஆட்ட நாயகன் ஆகியோருக்கே சிறப்புப் பரிசில்களை வழங்கப்படவிருக்கின்றன.

இதேவேளை -

சென்.பற்றிக்ஸ் - யாழ்ப்பாணக் கல்லூரி இடையேயான பொன் அணிகள் போரும் இன்று ஆரம்பமாகின்றது.

## கங்குலி மீது கபில்தேவ் குற்றச்சாட்டு



இங்கிலாந்தில் நடைபெற்ற நட்வெஸ்ட் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் இந்தியா வெற்றிபெற்றவுடன் அணித் தலைவர் சௌரவ் கங்குலி தனது மேல் சட்டையைக் கழற்றி ஆரவாரம் செய்தார்.

இச் செய்கையை இந்திய அணியின் முன்னாள் தலைவரும் முன்னாள் பயிற்றுநருமான கபில்தேவ் குறைகூறியுள்ளார்.

புதனன்று கொல்கத்தாவில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கபில்தேவ் கருத்துத் தெரிவிக்கையில் -

அணித்தலைவர்கள் உணர்ச்சிகளைக் கட்டுபடுத்தத் தெரிந்துகொள்ளவேண்டும். கங்குலி சட்டையைக் கழற்றியதும் நான் அதிர்ச்சியடைந்தேன்.

இளம் வீரர் ஒருவர் இப்படிச் செய்திருந்தால் பரவாயில்லை. ஆனால், கங்குலி அணித் தலைவர். இவ்வாறு கபில்தேவ் கூறினார்.

1983 இல் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் இந்தியா மேற்கிந்திய அணியைத் தோற்கடித்து சாம்பியனானது. அப்போது இந்திய அணிக்குத் தலைமை தாங்கியவர் கபில்தேவ் ஆவார்.

இதேவேளை -

தாம் விளையாடிய காலத்தை விட தற்போது கிரிக்கெட் துறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என கபில்தேவ் கூறினார். சுமார் 20 வருடங்களுக்கு முன் இப்படியான சம்பவம் நடந்திருந்தால் இது குறித்து எவரும் கவனம் செலுத்தியிருக்க மாட்டார்கள் என கபில்தேவ் கூறினார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நட்வெஸ்ட் கிண்ண இறுதிப் போட்டியில் இந்திய அணி வெற்றி இலக்கை அடைந்தபோது வீரர்களின் தங்கு மறைவில் இருந்த கங்குலி தனது சட்டையைக் கழற்றினார். (ம)

## பொதுநலவாய விளையாட்டு விழா: போட்டியாளர்கள் தேர்வில் சர்ச்சை!

பொதுநலவாய விளையாட்டு விழாவுக்கான இலங்கை அணியில் இறுதி நேரத்தில் மேலும் இரு போட்டியாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். எனினும் இவ்விருவரும் பார்வையாளர்களாக மாத்திரமே பங்குபற்றுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

4X100 மீற்றர் அஞ்சலோட்ட வீராங்கனை அனோமா சூரியஆராச்சி, 4X400 மீற்றர் அஞ்சலோட்ட வீரர் சுமேத அருணசாந்த ஆகியோரே இறுதி நிமிடத்தில் அணியில் சேர்க்கப்பட்டோராவர்.

தாம் சேர்க்கப்படாமை குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் இவர்கள் புகார் செய்தனர். இந்நிலையில் இவ்விருவரும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மகளிர் அஞ்சலோட்ட அணிக்கான தகுதிகாண் போட்டிகளில் அனோமா பங்குபற்றவில்லை. சுமேத அருணசாந்த தகுதிகாண் போட்டிகளில் பங்குபற்றினார். எனினும், அவருக்கு ஏழாவது இடமே கிடைத்தது. இதனால் மேற்படி போட்டியாளர்கள் இருவரும் பொதுநலவாயப் போட்டிகளுக்கு சேர்க்கப்படவில்லை.

முன்னணி ஓட்ட வீராங்கனைகளான சுசந்திகா ஜயசிங்க, தமயந்தி தர்ஷா ஆகியோர் 4X100 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டிக்கு நேரடியாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவ்வருடத்தில் முக்கிய போட்டிகள் எதுவும் நடைபெறாததால், கடந்த வருடம் போட்டியாளர் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் பொதுநலவாய விளையாட்டு விழாவுக்கான போட்டியாளர்களைத் தெரிவுசெய்ய அதிகாரிகள் திட்டமிட்டனர். கடந்த வருடம் அனோமா ஆறாவது இடம் பெற்றார். எனவே, அஞ்சலோட்ட அணியில் அவர் பெயர் சேர்க்கப்பட்டது.

ஆனால், பின்னர் புதிய தகுதிகாண் போட்டிகள் மூலம் அஞ்சலோட்ட அணியைத் தெரிவுசெய்வதற்கு அதிகாரிகள் தீர்மானித்தனர்.

இத்தீர்மானத்திற்கு அனோமா எதிர்ப்புத் தெரிவித்தார். தகுதிகாண் போட்டிகள் நடத்தினால் சுசந்திகா, தர்ஷா ஆகியோரும் தகுதிகாண் போட்டியில் பங்குபற்ற வேண்டுமென அனோமா கோரினார். இதையடுத்து அனோமாவுக்குப் பதிலாக லாலனி ஜராங்கனி பொதுநலவாயப் போட்டிகளுக்குச் சேர்க்கப்பட்டார். (ம)

## இன்றைய நிகழ்வுகள்

ஹற்றன் நஷனல் வங்கி வருடாந்தம் யாழ்.இந்துக் கல்லூரி ஆடுகளத்தில் நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

- மாலை 4 மணி - யாழ்.இந்துக கல்லூரி எதிர் சென்.ஜோன்ஸ் கல்லூரி.
- மாலை 5 மணி - யாழ்.மத்திய கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி. (ம-3-86)

★ ★ ★

இலங்கை வங்கி மற்றும் றூபி சுவல்ர்ஸ் அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்திவரும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று மாலை 4.30 மணிக்கு பல்கலைக் கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.


இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கலந்துகொள்வார்.

இறுதியாட்டத்தில் யூனியன் அணியும் பல்கலைக்கழக அணியும் மோதுகின்றன. (ம-3)

★ ★ ★


யாழ்ப்பாணம் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் 13 வயதுக்கு உட்பட்டோருக்கான தோல் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதுகின்றன. (ம-86)

# இது எங்களின் கடல்









கடற்புலிகள் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு 10 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் குறிக்கும் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் முல்லைத் தீவில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கடற்புலிகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

அன்றைய தினம் இடம்பெற்ற போராளிகளின் கலைநிகழ்வுகளையும், கடற்புலிகளின் தளபதி சூசை உரையாற்றுவதையும் ஏனைய படங்களில் காணலாம்.

## அவசர சட்ட மூலங்களை நிறைவேற்ற நாடாளுமன்றம் தொடர்ந்து கூடும்

### ஓகஸ்ட் மாதம் முழுவதும் நடைபெறும்

கொழும்பு,ஜூலை19

அடுத்த மாதத்தில் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படவிருக்கும் 36 சட்ட மூலங்களில் 10 சட்ட மூலங்கள் தயாரிக்கப்பட்டுவிட்டன. அவற்றில் நான்கு சட்ட மூலங்கள் ஏற்கனவே வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்ட இச்சட்ட மூலங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றன.

வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் சட்ட மூலங்கள் அடுத்த மாதம் 6ஆம், 7ஆம், 8ஆம் திகதிகளில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றன என்று அரசாங்கக் கட்சியின் பிரதம அமைப்பாளரான அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்திருக்கின்றார்.

ஏனைய சட்ட மூலங்கள் யாவும் சட்டவாக்குப் பிரிவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன என்றும் அவர் சொன்னார்.

இச்சட்ட மூலங்களை விரைவாக நிறைவேற்றுவதற்கு வசதியாக நாடாளுமன்றத்தை ஓகஸ்ட் மாதம் முழுவதும் கூட்டுவதென அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. (ம)

## பலஸ்தீனர்கள் மீதான கட்டுப்பாடு தளர்வு

# தற்கொலைத் தாக்குதல்களால் வளைந்து கொடுக்கிறது இஸ்ரேல்

லண்டன்,ஜுலை19

இஸ்ரேலியத் தலைநகர் டெல் அவிவில் பலஸ்தீனத் தீவிரவாதிகள் நடத்தியதாகக் கூறப்படும் இரு தற்கொலைத் தாக்குதல்களையடுத்து பலஸ்தீனர்கள் மீதான தனது கட்டுப்பாடுகளைத் தளர்த்தும் நடவடிக்கையை இஸ்ரேல் மேற்கொண்டுள்ளது.

மேற்குக்கரையின் பலஸ்தீன நகரங்களை இஸ்ரேலிய இராணுவம் ஆக்கிரமித்ததுடன், பலஸ்தீனத் தீவிரவாதிகளைத் தேடுவதாகக் கூறிக்கொண்டு மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதாகப் பலஸ்தீனர்கள் குற்றஞ்சாட்டி வருகின்றனர். இந்நிலையில், பலஸ்தீனத் தற்கொலைத் தாக்குதல்களில் சமீபத்திய சம்பவங்களாக டெல் அவிவில் இரு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் 3 பேர் கொல்லப்பட்டனர்; 40 பேர் வரை காயமடைந்தனர்.

டெல் அவிவ் பஸ்நிலையத்திலும், புறநகர்ப் பகுதியிலும் இந்தத் தற்கொலைத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

புறநகர்ப் பகுதியில் வெளிநாட்டுப் பணியாளர்கள் இருந்த பகுதியிலேயே தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் -

அதில் இறந்தவர் வெளிநாட்டவர் என்றும் -

இஸ்ரேலியப் பொலீஸார் தெரிவித்தனர்.

பஸ்நிலையத் தாக்குதலில் இரு இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

இரு சம்பவங்களிலும் தற்கொலைக் குண்டுதாரிகள் தமது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கவைத்தே தாக்குதலை மேற்கொண்டனர்.

இஸ்ரேல் முடிந்தளவு பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டபோதும் பலஸ்தீனத் தற்கொலைத் தாக்குதல்களைத் தடுக்க முடியவில்லை என்றும் -

அதனாலேயே பலஸ்தீனர்கள் மீதான கட்டுப்பாடுகளை இஸ்ரேல் தளர்த்த முன்வந்துள்ளதாகவும் -

அவதானிகள் கருதுகின்றனர்.

இதேசமயம், மேற்குக்கரையில் வர்த்தக, தொழில் நடவடிக்கைகள் சுதந்திரமாக இயங்கவே கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதாக இஸ்ரேல் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)



டெல் அவிவில் தற்கொலைத் தாக்குதல் நடந்த இடங்களில் ஒன்று

# தீவிரவாதிகள் மறைந்துள்ள காஷ்மீர் மசூதி சுற்றிவளைப்பு

ஜம்மு,ஜுலை19

காஷ்மீரில் தீவிரவாதிகள் ஒளிந்துள்ள டோடா மாவட்ட மசூதியை ராணுவத்தினர் சுற்றிவளைத்தனர். தீவிரவாதிகள் நேற்றுமுன்தினம் இரவு முதல் மசூதியில் ஒளிந்துள்ளதாக அதிகாரவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நெடுஞ்சாலையில் அமைந்துள்ள இந்த மசூதியில் தீவிரவாதிகள் நுழைந்துள்ளனர் என்று ராணுவத்தினருக்கு தகவல் கிடைத்ததும் அந்த மசூதியை சுற்றிவளைத்தனர். பின்னர் அவர்களை சரணடையுமாறு ராணுவத்தினர் எச்சரிக்கை விடுத்தனர். ஆனால், தீவிரவாதிகள் திடீரென்று சுட ஆரம்பித்ததால் ராணுவத்தினரும் திருப்பிச் சுட்டனர் என்று செய்து வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் துப்பாக்கிச் சூட்டின்போது தீவிரவாதிகள் ஏவிய ரொக்கெட் ஒன்று குடியிருப்புப் பகுதியில் உள்ள வீட்டை சேதப்படுத்தியது.(ஒ)

# தஜிகிஸ்தான் படைவீரர் ஆப்கானியரால் கடத்தல்

தஜிகிஸ்தான் எல்லைக்காவல் படைவீரரையும் உள்ளூர் பொதுமக்கள் மூவரையும் ஆப்கான் தீவிரவாத குழு ஒன்று கடத்திச்சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது. தஜிகிஸ்தான் எல்லையோரமுள்ள சுராபாத் நகரில் இச்சம்பவம் நிகழ்ந்தது.

160 ஆயிரம் டொலர்களை அளித்தால்தான் கடத்தப்பட்டவர்களை விடுவிப்போம் என தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்.

ஆப்கானிலிருந்து போதைப் பொருள்கள் கடத்தப்பட்டு தஜிகிஸ்தான் வழியாக ரஷ்யாவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் கொண்டு செல்லப்படுகின்றன. போதைப்பொருள்களை வாங்குவோர் அதற்குரிய பணத்தைத் தராவிடில் அவர்கள் தீவிரவாதிகளால் கடத்திச்செல்லப்படுவது வாடிக்கையாகிவிட்டது என்று உள்ளூர் பொதுமக்கள் சிலர் தெரிவித்தனர். (ஒ)

# ஸ்பெயின்-மொரோக்கோ இடையே பிரஜில் தீவு குறித்து பிணக்கு!

மாட்ரிக்,ஜுலை19

மத்தியதரைக் கடல் பகுதியில் மொரோக்கோ அருகே பிரஜில் என்ற குட்டித்தீவு இருக்கிறது. இது யாருக்குச் சொந்தம் என்பதில் ஸ்பெயின், மொரோக்கோ ஆகிய இரு நாடுகளுக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் அந்தத் தீவுக்கு மொரோக்கோ 6 இராணுவ வீரர்களை அனுப்பி ஒரு கண்காணிப்பு நிலையை அமைத்தது. அங்கு தங்கள் கொடியையும் பறக்கவிட்டு இருக்கிறது. போதை மருந்து கடத்தல் கும்பலைக் கண்காணிக்கவே அங்கு சாவடி அமைத்து இருப்பதாக மொரோக்கோ கூறியது.

அந்தச் சாவடியை விட்டு மொரோக்கோ வீரர்கள் வெளியேற வேண்டும் என்று ஸ்பெயின் அரசாங்கம் கூறியது. ஆனால், மொரோக்கோ இதை ஏற்க பிடிவாதமாக மறுத்து வருகிறது. ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நேட்டோ பாதுகாப்பு கூட்டணி விடுத்த வேண்டுகோளுக்கும் மொரோக்கோ செவிசாய்க்கவில்லை.

இதைத்தொடர்ந்து பிரஜில் தீவுப் பகுதிக்கு ஸ்பெயின் தன் கடற்படைக் கப்பல்களை அனுப்பி இருக்கிறது. மொரோக்கோவில் உள்ள தனது தூதரையும் ஸ்பெயின் திருப்பி அழைத்துக்கொண்டது.

பிரஜில் தீவில் இருந்த மொரோக்கோ வீரர்களையும் ஸ்பெயின் அப்புறப்படுத்திவிட்டது. இந்த நடவடிக்கையில் யாருக்கும் காயம் இல்லை என்றும் ஸ்பெயின் அறிவித்து இருக்கிறது.

மொரோக்கோ இராணுவம் மீண்டும் பிரஜில் தீவை ஆக்கிரமிக்காது இருந்தால் தனது படையை உடனடியாக விலக்கிக்கொள்வதாகவும் தற்போது ஸ்பெயின் கூறியுள்ளது.

உதைபந்தாட்ட மைதானத்தின் அளவே உள்ள கற்பாறைகள் நிறைந்த பிரஜில் தீவு, 1668ஆம் ஆண்டு முதல் ஸ்பெயின் ஆளுகைக்குள் இருந்தது. ஆயினும் கடந்த 40 ஆண்டுகளாக மக்கள் குடியிருக்காத தீவாகவே இருந்துவந்தது. (ஒ)



பிரஜில் தீவில் நிலைகொண்ட 6 மொரோக்கோ படைவீரர்களையும் அவர்கள் ஏற்றிய மொரோக்கோ தேசியக்கொடியையும் படத்தில் காணலாம்.

# என்னைப் பதவியிலிருந்து அகற்ற அமெரிக்காவால் முடியாது!

## ஈராக் அதிபர் சதாம் அறைகூவல்

பாக்தாத்,ஜுலை19

'என்னையோ அல்லது எனது அரசையோ பதவியகற்ற அமெரிக்காவால் முடியாது.'

- இவ்வாறு அறைகூவல் விடுத்துள்ளார் ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைன்.

ஈராக் புரட்சி தினமான நேற்றுமுன்தினம் நாட்டுமக்களுக்கு தொலைக்காட்சியில் ஆற்றிய உரையிலேயே சதாம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றியபோது:-

'இரக்கமற்ற சாத்தான்கள் கூட அமெரிக்காவுக்கு உதவ முன்வரப்போவதில்லை. அந்த அளவுக்கு அமெரிக்கா கொடியது. இனி எக்காலத்திலும் அமெரிக்காவால் என்னை வெல்ல முடியாது.

உலகத்தையே எனக்கெதிராக அமெரிக்கா திரட்டி வந்தாலும் - அனைத்து சாத்தான்களையும் அமெரிக்காவின் பக்கம் சேர்த்துக்கொண்டாலும் - அமெரிக்க அதிபர் புஷ்ஷினால் என்னை எதுவும் செய்துவிட முடியாது' என்றார்.

ஈராக்கை 'சாத்தானின் அச்சுகளில் ஒன்று' என்று அமெரிக்க அதிபர் புஷ் முன்னர் வர்ணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# அமெரிக்காவில் முதல் தடவையாக உள்நாட்டுப் பாதுகாப்புத் திட்டம்

## அதிபர் புஷ் அறிவித்தார்

வாஷிங்ரன்,ஜுலை19

அமெரிக்காவின் முதலாவது உள்நாட்டுப் பாதுகாப்புத்திட்டம் ஒன்றை ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் வெளியிடவுள்ளார்.

எதிரிநாடுகளின் அணு ஆயுதங்களைக் கண்டுபிடிக்கும் கருவிகளைப் பொருத்துவதற்கான உத்தரவுகளைப் பிறப்பிப்பது, பயங்கரவாத சந்தேகநபர்களை நாட்டை விட்டு வெளியேற்றுவது ஆகிய நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் அளிக்கும் சட்டமும் இந்த உள்நாட்டுப் பாதுகாப்புத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

100 பக்கங்களைக் கொண்ட இந்தப் புதியதிட்டத்தை வெள்ளை மாளிகையில் நடைபெறும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான மாநாட்டில் புஷ் வெளியிடுவார்.

எதிரிகள் இராசாயன ஆயுதங்கள், நுண்ணுயிர் ஆயுதங்கள் என்பவற்றைக்கொண்டு தாக்குதல் நடத்தினால் அதிலிருந்து மக்களைக் காப்பதற்கான தடுப்பூசி மருந்துகளை உருவாக்குவதற்கான திட்டங்களும் அதில் அடங்கும்.

அமெரிக்க ஆயுதங்கள் மற்றும் படைபலம் என்பனபற்றிய செய்திகள் பத்திரிகைகளில் வெளிவராமல் தடுக்கவும் இந்தப் பாதுகாப்புத் திட்டம் ஜனாதிபதிக்கு அனுமதி வழங்குகின்றது.

கடந்த செப்ரெம்பர் 11 தாக்குதல் போன்ற வேறொரு தாக்குதல் இனிமேல் அமெரிக்கா மீது நடத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காகவே உள்நாட்டுப் பாதுகாப்புத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாக புஷ் தெரிவித்துள்ளார். (ம)

உலக அரங்கில்

# 21 பிள்ளைகளின் பெற்றோர்

கோலாலம்பூர்,ஜுலை19

21 பிள்ளைகளைப் பெற்ற கணவன் - மனைவி இனிமேல் பிள்ளை பெறப்போவதில்லை என்று முடிவு செய்துள்ளார்கள்.

இந்தத் தம்பதியினர் மலேசிய நாட்டில் வசித்து வருகின்றனர். அவர்கள் இதுவரை பெற்ற பிள்ளைகளின் எண்ணிக்கை 21. மேலும் பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு இருந்தும், உடல் நலம் கருதி அதை நிறுத்திக்கொள்ள முடிவுசெய்து இருக்கிறார்கள். இவர்களில் மனைவியின் பெயர் ஜுஜோக்லென். அவருடைய கணவர் பெயர் லேம் ஆகுநிகாம் (வயது 49). 27 ஆண்டுகளுக்கு முன்பு இவர்களுக்குத் திருமணம் நடந்தது. அப்போது மனைவிக்கு வெறும் 15 வயதுதான். அவரது கணவருக்கு 22 வயதாக இருந்தது.

அந்தப் பெண்ணின் கணவர் மரங்களை அறுக்கும் மில்லில் வேலை செய்துவருகிறார். ஆரம்ப காலத்தில் வறுமை காரணமாக 2 குழந்தைகளைத் தத்துக் கொடுத்துவிட்டனர். ஒரு குழந்தை பிறக்கும்போதே இறந்துவிட்டது. மற்றக் குழந்தைகள் நலமுடன் வாழ்கின்றார்கள். இவர்களின் மூத்த மகளுக்கு 24 வயது ஆகிறது. திருமணமாகி அவரும் தாய்மை அடைந்துவிட்டார்.

21ஆவதாக பிறந்த குழந்தை தற்போது 5மாதம் ஆகிறது. மேலும் குழந்தை பெற வயதும், இளமையும் இருந்தும் குழந்தைகள் போதும் என்ற முடிவுக்கு இவர்கள் வந்துள்ளனர். (ஓ)

## தூதரகத்தில் சிறுவர் தஞ்சம்

லண்டன்,ஜுலை19

ஆஸ்திரேலியாவின் 'வுமேரா' அகதிகள் முகாமிலிருந்து தப்பியவர்கள் என்று கருதப்படும் 12 மற்றும் 13 வயதுகளுடைய இரு சிறுவர்கள் ஆஸ்திரேலியாவிற்கான பிரிட்டிஷ் தூதரகத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

அவர்கள் அங்கு அரசியல் தஞ்சம் கோரியுள்ளதாகக் கூறப்படுகிறது.(ஒ)

# பிரிட்டிஷ் ஹெலி விபத்தில் 11 பேர் உயிரிழந்தனர்!

லண்டன்,ஜுலை19

பிரிட்டனின் வடக்குக் கடற்பரப்பில் ஹெலிகொப்டர் ஒன்று விபத்துக்குள்ளாகி கடலில் வீழ்ந்ததில் அதிலிருந்த 11 பேரும் உயிரிழந்துவிட்டதாக நம்பப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் கடலில் பெற்றோலிய கிணறு தோண்டுவதில் ஈடுபட்டிருந்த நிறுவனத்தின் ஹெலிகொப்டரே விபத்துக்குள்ளாகியது.

அதில் பெற்றோலிய நிறுவனத்தின் 9 பணியாளர்களும் 2 விமானிகளும இருந்தனர். கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கடற்கரையிலிருந்து 25 கடல் மைல்கள் தொலைவில் பறந்துகொண்டிருந்தபோது அந்த ஹெலிகொப்டர் கடலில் வீழ்ந்தது.

அப்பகுதியில் மீட்புப்பணியில் ஈடுபட்டவர்கள் 5 பணியாளர்களின் சடலங்களை மீட்டுள்ளனர்.

மற்றைய ஆறுபேரும் உயிர் பிழைத்திருக்கச் சாத்தியம் இல்லை என்றும் -

அவர்களது உடல்கள் விபத்துக்குள்ளான ஹெலி மூழ்கிய இடத்திலிருந்து வெகு தொலைவு சென்றிருக்கக்கூடும் என்றும் -

மீட்புப்பணிகளில் ஈடுபட்டுள்ள 'ரோயல்' விமானப்படையின் அதிகாரி அலன் பிராண்ட் கம்போ கூறினார்.(ஒ)

# 'எயிட்ஸை' எதிர்த்துப் போராட விரைவில் புதியதோர் அமைப்பு

சர்வதேச அளவில் எய்ட்ஸ் நோயை ஒழிக்க 18 ஆபிரிக்க நாடுகளின் தலைவர்களது மனைவியர் புதிய அமைப்பை ஏற்படுத்தி வருகின்றனர்.

ஜெனிவா நகரில் இந்த வாரம் நடைபெறவிருக்கும் மூன்று நாள் கூட்டத்தில் இந்தப் புதிய அமைப்பு பற்றிய அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தகவலை ஐ.நா. எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத்துறை இயக்குநர் பீட்டர் பயட் தெரிவித்தார். இது குறித்து ஜெனிவா நகரில் செய்தியாளர்களிடம் அவர் மேலும் கூறியதாவது:

'உலகில் 4கோடி பேர் எய்ட்ஸ் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். ஆபிரிக்க நாடுகளில் 26 கோடி பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெண்கள் 50 வீதம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, எய்ட்ஸ் நோயை ஒழிக்க சர்வதேச அளவில் புதிய அமைப்பு தேவையென 18ஆபிரிக்க நாடுகளின் தலைவர்களின் மனைவியர் முடிவெடுத்தனர். கடந்த 18மாதங்களில் இதுபற்றி மூன்று முறை கூடி விவாதித்தனர். இதனையடுத்தே எய்ட்ஸ் நோய் ஒழிப்புக்கான புதிய அமைப்பை உருவாக்க திட்டம் வகுக்கப்பட்டுள்ளது - என்றார் (ஒ)

## புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை - 2002
## மாதிரி வினாத்தாள் இல. - 4
### பகுதி 1

தரம் 5 நேரம்:- 45 நிமிடம்

★ **01-04 வரையுள்ள வினாக்களுக்குத் தரப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடை எழுதுக.**

01. பின்வரும் பாடல் வரி எதனைப்பற்றி உள்ளதோ அந்த விடையின் கீழ்க் கீறிடுக
"அதோ அதோ பறவை கப்பல் ஆகாயத்தில் செல்லுது
அதிசயமாய் எல்லோரையும் அங்கே பார்க்கச் சொல்லுது"
(1) பட்டம் (2) பறவை (3) விமானம் (4) நட்சத்திரம்

02. கீழ்வரும் பாடல் வரிகள் எதனைப் பற்றி உள்ளதோ அந்த விடையின் இலக்கத்தைச் சுற்றிச் சதுரம் வரைக.
காலைக் கதிரவன் வான் வரவே
கண்ணைத் திறந்து நான் விளித்து
கோல நகையைக் காட்டிடுவேன்
குளத்தின் அழகைக் கூட்டிடுவேன்.
(1) மீன் (2) தாமரை (3) சேவல் (4) சூரியன்


03. கீழ்வரும் பாடல் வரிகள் நாக்கைப் பற்றியது என்றால் "நாவில்" என்ற சொல்லின் கீழ்க் கீறிடுக. அவ்வாறன்றி "பல்சுவை" பற்றியது என்றால் "உறைக்கும்" என்ற சொல்லைச் சுற்றி வட்டமிடுக.
சீனி தின்றால் இனிக்கும்.
மாங்காய் வாயிற் புளிக்கும்.
மிளகாய் வாயில் உறைக்கும்.
பாக்கு நாவில் கயரும்.
உப்பு சுவைக்க உவர்க்கும்.


04. கீழ்வரும் பாடல் வரிகள் எதனைப்பற்றி உள்ளதோ அந்த விடையினைச் சுற்றி கட்டமிடுக.
வாலைத் தூக்கி ஓடிவரும்.
வளைந்த கொம்பை ஆட்டி வரும்.
(1) நாய் (2) பூனை (3) பசு (4) குதிரை

★ **05-07 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் நான்கு படங்கள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று ஏனைய மூன்று படங்களுடனும் ஏதோ ஒரு வகையில் பொருந்தமற்றது. அதனைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

05.


(1) (2) (3) (4) (............)

06.

(1) (2) (3) (4) (............)

07.

(1) (2) (3) (4) (............)


★ **08-16 வரையுள்ள வினாக்களின் சரியான விடையின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

08. 43+28 என்பதற்கு மிகக் கிட்டிய பெறுமானம்
(1) 27+33 (2) 40+30 (3) 42+38 (4) 45+45 (............)

09. பின்வருவனவற்றுள் எது மிக நீளமான நூலாகும்.
(1) (2) (3) (4)


10. கீழே ஒவ்வொரு துண்டத்திலுமுள்ள எண்கள் எவ்வாறு தொடர்புபட்டுள்ளனவோ அவ்வாறே ஏனைய துண்டத்திலுள்ள எண்களும் தமக்குள் தொடர்புபட்டுள்ளன. இங்கு விடுபட்டுள்ள எண் யாது?


(1) 8 (2) 9
(3) 10 (4) 11

11. அமிர்தன் சம அளவான நீரைக் கீழுள்ள பாத்திரங்களான 1இலும் 2இலும் ஊற்றினான்.

1 2 3 4
பின்னர் பாத்திரம் 1இலுள்ள நீரைப் பாத்திரம் 3 இனுள்ளும் பாத்திரம் 2இலுள்ள நீரைப் பாத்திரம் 4இனுள்ளும் ஊற்றினான். அப்போது பாத்திரம் 3,4இன் நீர்மட்டத்தின் அளவு எவ்வாறு இருக்கும்?
(1) இரண்டிலும் நீர்மட்டம் சமமாக இருக்கும்.
(2) 3இன் மட்டம் 4இன்மட்டத்திலும் குறைவாக இருக்கும்.
(3) 4இன் மட்டம் 3இன்மட்டத்திலும் குறைவாக இருக்கும்.
(4) 3இன் மட்டம் 4இன்மட்டத்தைப்போல் இருமடங்காயிருக்கும்.
(............)

12. தேனிலா, தேனிகா, தேனுகா ஆகிய மூவரும் களியாட்ட நிகழ்ச்சியொன்றுக்குச் சென்றிருந்தனர். அங்கே யானைகளின் வேடிக்கையான நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழ்ந்தார்கள். அங்கு வந்த யானைகளின் துதிக்கைகள், வால்கள் என்பவற்றின் கூட்டுத் தொகையிலும் பார்க்க 10கால்கள் கூடுதலாக இருந்தன. என்று கூறினார்கள். அங்கு எத்தனை யானைகள் வந்தன?
(1) 5 (2) 10 (3) 15 (4) 20 (............)

13. ஓர் ஆசிரியரிடம் எப்பொழுதும் காணப்படவேண்டியது:
(1) புத்தகம் (2) வெண்கட்டி (3) சிவப்புப் பேனா
(4) நல்லொழுக்கம் (............)

14. ஒரு சிறுவன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை சித்தியடைந்து வெளிநாட்டுக்குச் சுற்றுலாப்பயணம் சென்றான். அவனது தாயார் கொழும்பில் வசித்தார். சிறுவன் அங்கு இருக்கும் இடத்தில் நண்பகலாயிருக்கும்போது, தாய் வசிக்கும் இடத்தில் நேரம் அதே நாள் காலை 5 மணியாகும். ஒரு நாள் காலை 7 மணிக்கு அச்சிறுவன் தன் தாயாருடன் தொலைபேசியில் உரையாடினான். அப்போது அவரது தாயாரின் வீட்டில் என்ன நேரமாயிருக்கும்?
(1) நண்பகல் (2) பி.ப.2.00 (3) பி.ப.5.00 (4) நள்ளிரவு

15. வெண்ணிலா கீழே உள்ளவாறு கோபுரத்தை குற்றிகளால் செய்தாள். அவள் அதே கோலத்தைப் பின்பற்றும் இன்னொரு கோபுரத்தை அமைக்கிறாள். அது 6 குற்றிகள் உயரமுள்ளது. புதிய கோபுரத்தில் எத்தனை குற்றிகள் இருக்கும்?

(1) 60 (2) 42 (3) 36 (4) 30

16. சுபகா ஆடிக்குள்ளே பார்த்தபோது இத்தெறிப்பைக் கண்டாள்.

திருத்தமான நேரம் யாதாக இருக்கலாம்?
(1) 2.40 (2) 3.40 (3) 4.20 (4) 8.20

★ **கீழ்வரும் வினாக்களில் அடைப்புக்குறிக்குள் இருக்கும் மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

17. மோட்டார் வண்டிகளை (கௌரவத்திற்காக, சுகத்திற்காக, பிரயாணஞ்செய்வதற்காக) வைத்திருப்பார்கள்.
18. நாம் தலையில் தொப்பி அணிவது (வழுக்கையை மறைக்க, அழகிற்காக, வெப்பத்திலிருந்து பாதுகாக்க) ஆகும்.
19. நாம் பத்திரிகைகளை (செய்திகளை அறிவதற்காக, பொழுது போக்கிற்காக, பரீட்சை எழுதுவதற்காக) படிக்கின்றோம்.

★ **சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

20. விளையாடுவதற்கு மைதானம் எனின், படிப்பதற்கு ..................
(1) மாணவர் (2) புத்தகம் (3) பாடசாலை (4) ஆசிரியர்
21. கடலில் மீன் போல, வானத்தில் ..................
(1) சந்திரன் (2) சூரியன் (3) நட்சத்திரம் (4) முகில்
22. வீட்டுக்கு அத்திவாரம்போல் மரத்திற்கு ..................
(1) நிலம் (2) வேர் (3) நீர் (4) தண்டு

★ **கீழ்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள படத்தோடு தொடர்பு இல்லாத சொற்றொடரின் கீழ்க் கீறிடுக.**


23.

(1) பணம் உழைத்தல்.
(2) சமநிலையைப் பேணுதல்.
(3) பொருட்களை நிறுத்தல்.

24.

(1) பயிர்கள் செழிப்படையும்.
(2) வெள்ளப் பெருக்கு ஏற்படும்.
(3) நீர்ப்பற்றாக்குறை ஏற்படும்.

★ **கீழே தரப்பட்ட பெயர்களுக்குரிய இரகசியக் குறியீட்டினைக் குறிக்கும் விடையின் கீழ்க் கீறிடுக.**

25. சிவசிதம்பரம்


26. மண்மதராமன்
(1) MXMTKNM (2) MXMTKMX
(3) MXMKTXM (4) MXMTXMX


★ **பின்வரும் மரபுத் தொடர்கள் உணர்த்தும் கருத்துள்ள விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

27. "கை கொடுத்தல்" என்பது
(1) வரவேற்றல் (2) உதவி செய்தல் (3) வழிகாட்டல் (..........)
28. "ஒற்றைக் காலில் நிற்றல்" என்பது
(1) ஒரு காலில் நிற்றல் (2) மரியாதையாக நிற்றல்
(3) பிடிவாதம் பிடித்தல் (..........)
29. "கண் வளர்தல்"
(1) இறத்தல் (2) புத்தி உண்டாதல் (3) நித்திரை செய்தல் (..........)

★ **கீழ்வரும் வினாக்களில் பொருத்தமான எழுவாய், பயனிலை கொண்டு அமையாத வாக்கியத்தின் இலக்கத்தினை அடைப்புக்குள் எழுதுக.**


30. (1) பூக்கள் காலையில் மலர்ந்தன.
(2) பறவைகள் வானத்தில் பறக்கும்.
(3) சேவல் காலையில் கூவின. (..........)

31. (1) கிளிகள் பறந்து சென்
(2) மாடு புல் மேயும்.
(3) மாடுகள் புற்களை மே

★ **பழக்கடை ஒன்றிலுள்ள 480 க... அமைப்புக் காட்டுகிறது. ... விடையைப் புள்ளிக் கோட்டிழ...**




32. மிகக் கூடுதலாக உள்ள ...
33. மிகக் குறைவாக உள்ள ...
34. எப்பழங்கள் சம அளவில் ...
..............................
35. கடையிலுள்ள தோடம்பழங்க...

★ **தரப்பட்ட அமைப்புக்களில்... வடிவங்களின் எண்ணிக்கை...**

36.

37.

சதுரங்கள .............. முக்கோணி ...

★ **எண்கோலத்திற்கு ஏற்ப வெ... எண்களை எழுதுக.**

39.


40.

### பகு...

★ **பின்வரும் பாடலை வாசித்து... விடை எழுதுக.**
அம்மா நான் விளையாட...
அன்புடன் பட்சணம் தந்...
சும்மா நான் உட்கார மா...
தோழர் அழைக்கின்ற ந...

பூப்பறித்தாடுவோம் கொ...
பூசை செய்தாடுவோம் பூ...
வேப்பமரத்தடி மண்ணில் ...
வீடுகள் கட்டி விருந்துக...

01. இப்பாடல் யார்/யாரைப் பார்...
..............................
02. அம்மாவிடம் சிறுவன் எதை...
..............................
03. பூசை செய்வதற்காக என்ன ...
..............................
04. வேப்பமரத்தடி மண்ணில் என்...
..............................
05. தோழர்கள் எப்படிப்பட்டவர்...

★ **பின்வருவனவற்றுக்கு ஒவ்வொ... எழுதுக.**
06. உயர்திணைப் பெண்பால் ...
07. அஃறிணைப் பலவின்பால் ...
08. உயர்திணைக்குரிய தன்ம...
09. உயர்திணைக்குரிய தன்மை...

★ **ஒத்தகருத்துள்ள சொல் எழு...**
10. பூரதம் ..............................
★ **எதிர்க்கருத்துள்ள சொல் எழு...**
12. அன்பு ..............................
★ **பன்மைச் சொல் எழுதுக.**
14. நான் ..............................
★ **பிரித்தெழுதுக.**
16. தந்தனுப்பு ..............................
17. "போறேன்" என்பது பேச்ச... திருத்தமான சொல்லை எழு...
★ **பின்வரும் தமிழ்ச் சொற்களி...**
18. கை ..............................
20. நான் ..............................

★ **ஆரம்ப விஞ்ஞானச் செயற்பா... இடையிலே உள்ள தொடர்பைச் ... மேற்கொள்வதற்காகத் தரம் 5 ... இரண்டு மெழுகுவர்த்திகளும் ஒ... வருமாறு ஆசிரியர் கூறினார். 48 ... 3/4 பங்கினர் மட்டுமே ஆசிரியர் ... வந்தனர். ஏனையோரில் 5 பே... கொண்டுவந்தனர். மற்றையோ... வரவில்லை. இதன்படி கீழ்வரு...**

22. எத்தனைபேர் ஆசிரியர் கூறி... கொண்டு வந்தனர்?
23. ஒரு பொருளையேனும் கொ...

உதயன்

## கருத்துப் பரிமாற்ற முயற்சி நல்லிணக்க நடவடிக்கையா?

"நிலைத்து நிற்கும் சமாதானத்தை அடையும் குறிக்கோளுடன் இன நல்லிணக்கம் தொடர்பான தேசிய கருத்துப் பரிமாற்றம் ஒன்றை ஆரம்பித்துள்ளேன். மகாசங்கத்தினர், புத்திஜீவிகள், ஆசிரியர்கள், விவசாயிகள் உட்பட சமூகத்தின் சகல தரப்பினரும் தேசிய நல்லிணக்கம் தொடர்பான தமது கருத்துக்களைத் தெரிவிக்கலாம். இக்கருத்துப் பரிமாற்றம் மூலம் பெறப்படும் கருத்துக்களை ஒன்றுதிரட்டி அறிக்கையாக அரசிடம் சமர்ப்பிக்க எண்ணியிருக்கின்றேன" - இப்படித் திருவாய் மலர்ந்தருளியிருப்பவர் வேறு யாருமல்லர். நமது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவேதான்.

குருநாகலில், படையினரின் குடும்பங்களுக்கு வீடு வழங்கும் வைபவத்திலேயே ஜனாதிபதி இந்தத் தகவலை வெளியிட்டார். அந்தக் கையோடு இந்த விவகாரம் பற்றி பகிரங்க அறிவிப்பு ஒன்றை அவரது செயலகமும் விடுத்திருக்கின்றது.

மேலோட்டமாகப் பார்த்தால் அவரது அறிவிப்பு, கோரிக்கை மிக நல்ல முயற்சியாக - நல்லெண்ணம் கொண்டதாக - மக்கள் மனதில் படும் என்பது நிச்சயம்.

என்றாலும் இந்த அறிவிப்பின் பின்னணி என்ன? அதன் உள்நோக்கம் என்ன? என்பதையெல்லாம் சிந்தித்துப் பார்ப்பது அவசியமானது ஆகின்றது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் அவ்வப்போது அடிப்படையிலேயே மாறுபாடான கருத்துக்களைத் தெரிவித்து அடிக்கடி ஆச்சரியத்தை ஏற்படுத்தி வருபவர் ஜனாதிபதி.

'சமாதானத்தை எட்டுவதற்காக யுத்த நிறுத்தம்' என்ற கோசத்தோடு ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றிய அவர், பிற்காலத்தில் அந்த நிலைப்பாட்டிலிருந்து முற்றிலும் மாறுபட்டு 'சமாதானத்துக்கான யுத்தம்' என்று புதிய கொள்கைப் பிரகடனம் ஒன்றை விடுத்து பலரையும் ஆச்சரியத்துக்குள் மூழ்கவைத்தார்.

மக்களை ஆச்சரியத்தில் மூழ்கடித்த இந்தக் கொள்கையில் - முயற்சியில் - அவரது அரசு மூக்குடைபட்டதையடுத்து அதன் விளைவாக ஆட்சி கைமாறியது முடிந்துபோன சரித்திரம்.

புதிய ஐக்கியதேசிய முன்னணி அரசு யுத்தத்தை நிறுத்தி, அதை கடந்த ஏழு மாத காலமாக நீடிக்கவைத்து, இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேச்சு நடத்தி பிணக்குக்குத் தீர்வுகாண ஆக்கபூர்வமான முயற்சிகளை எடுத்துவருகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் 'இன நல்லிணக்கத்துக்கான கருத்துப் பரிமாற்றம்' - என்ற புதிய பூததைக் கிளப்பிவிடுகின்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் என்ற பெயரில் ஜனாதிபதியால் முன்வைக்கப்படும் இந்தக் கருத்துப் பரிமாற்றத்திட்டம், அரசு தற்போது மேற்கொள்ளும் சமாதான நடவடிக்கைகளுக்கு வலுக்கூட்டும் முயற்சியா? அல்லது அதற்கு முட்டுக் கட்டை போடும் ஒரு பின்னணி நோக்கம் கொண்டதா? இதுவே இப்போது எழும் கேள்வி.

இனப்பிரச்சினைக்கு காணப்படக்கூடிய தீர்வுக்காக சம்பந்தப்பட்ட தரப்புக்கள் எடுக்கும் முயற்சிகளுக்குக் குந்தகம் விளைவிக்காத வகையில் இனநல்லிணக்கம் பற்றிய கருத்துப் பரிமாற்றம் நடந்தால் அது வரவேற்கத்தக்கதே.

ஆனால், தீர்வு முயற்சியையும் அது தொடர்பான நகர்வுகளையும் காணப்படக்கூடிய தீர்வையும் முறியடிக்கும் விதத்தில் - அதில் தலையீடு செய்து குழப்பும் வகையில் - இந்த நடவடிக்கை எடுக்கப்படுமானால் அது ஆபத்தானது.

தேசிய ஒருமைப்பாட்டுக்கென ஓர் அமைச்சு தனியாக இருக்கும்போது தேசிய நல்லிணக்கம் என்ற நோக்கத்தோடு ஜனாதிபதி செயலகம் இதுவிடயத்தில் தனியாக நடவடிக்கை எடுப்பதும், தற்போதைய சமாதான நடவடிக்கைகளுடன் சம்பந்தப்படாத வகையில் இந்த முயற்சி இந்தச் சந்தர்ப்பத்தில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதும் பலத்த சந்தேகத்தைத் தோற்றுவித்திருப்பதை மறுக்க முடியாது.

இந்த விடயத்தில் ஜனாதிபதியின் நோக்கம் என்ன வென்பது காலப்போக்கில் அம்பலமாகும் என எதிர்பார்க்கலாம்.

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இன, மத வேறுபாடின்றி வரி அறவீடு!

## நிலைமையை விளக்குகிறார் கரிகாலன்

கொழும்பு,ஜூலை19

"நமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வர்த்தகத்தில் ஈடுபடும் அனைவரிடமும் வரி அறவிடப்படுகின்றது. அந்தவகையில் அங்கு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் முஸ்லிம்களிடமும் வரி அறவிடப்படுகின்றது."

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை அரசியற்றுறைப் பொறுப்பாளர் சி.கரிகாலன்.

கொழும்பு செய்தி ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே வரி அறவீடு குறித்து அவர் விளக்கினார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புரிந்துணர்வு ஒப்பந்த ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் ஆரம்பத்தில் காட்டிய துரித ஈடுபாட்டை அரசு இப்போது கைவிட்டிருப்பதுபோலப்படுகிறது. அதில் மந்தநிலையே காணப்படுகின்றது. என்றாலும் மெதுவாக சில செயற்பாடுகள், முன்னேற்றங்கள் தென்படுகின்றன. அந்தவகையில் புரிந்துணர்வு ஒப்பந்த ஏற்பாடுகள் நிறைவேற்றப்படும் என்ற எதிர்பார்ப்போடு - நம்பிக்கையோடு காத்திருக்கின்றோம்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்து இருதரப்பிலும் பெரும்பாலும் சுதந்திரமான நடமாட்டத்துக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வாய்ப்பை - சந்தர்ப்பத்தை - பயன்படுத்தி சிலர் எமது கட்டுப்பாட்டில் உள்ள காட்டுப் பகுதிகளுக்குள் ஊடுருவி, சட்டவிரோதமாக மரங்களைத் தறித்து வருகின்றனர். துரிதமாக நடைபெறும் இந்த அழிவுச் செயல் தடுக்கப்படவேண்டும். இந்தவகையில் எமது பிரதேசத்தில் பச்சை மரங்களை வெட்டுவதற்குத் தடை விதித்துள்ளோம். அதை மீறிச்செயற்பட்ட சிலர் உழவு இயந்திரங்களுடனும் வெட்டிய பச்சை மரங்களுடனும் எம்மிடம் சிக்கியுள்ளனர். எமது அனுமதியின்றி, எமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பச்சை மரம் வெட்டுவோரிடம் தண்டப்பணம் அறவிடப்படுகின்றது. அந்தத் தண்டப்பணம்மூலம் வனத்தில் மீள் நடுகை மேற்கொள்ளப்படுகின்றது.

அவ்வாறு சட்டவிரோத மரம் தறிப்பில் ஈடுபட்டிருப்போர் கைதுசெய்யப்பட்டிருக்கக்கூடும். விசாரணைகளின் பின்னர் முழு விவரமும் தெரிவிக்கப்படக்கூடியதாக இருக்கும்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களிடம் நாம் வரி அறவிடுவதாகக் கூறப்படுவது தவறான பிரசாரமாகும். முஸ்லிம்களிடம் வரி அறவிடக்கூடாது என்று ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அதேசமயம் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நாம் வரி அறவிடுவதை ஒப்பந்தம் தடைசெய்யவில்லை.

எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவோரிடமிருந்து வரி அறவிடுகின்றோம். அது கிழக்கில் மட்டுமல்ல, வட தமிழீழத்திலும் நடக்கின்றது. வரி விவரம் பற்றிய தகவல் பகிரங்கமாக எம்மால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தவகையில் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவோரிடமிருந்து - அவர்கள் முஸ்லிம்களாக இருந்தாலும், தமிழர்களாக இருந்தாலும் - வரி அறவிடப்படுகின்றது. அது உண்மையே.

அதை, நாம் முஸ்லிம்களிடமிருந்து வரி அறவிடுகின்றோம் என்றும் அது புரிந்துணர்வு ஒப்பந்த மீறல் என்றும் சிலர் பிரசாரப்படுத்த முயற்சிக்கின்றனர்.

கிழக்கில் தமிழர் - முஸ்லிம் கலவரங்களை எதிர்காலத்தில் இடம்பெறாது தடுப்பதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளை நாம் எடுத்துள்ளோம். கிராம மட்டத்தில் சமாதானக் குழுக்களை அமைத்துச் செயற்படுத்தி வருகின்றோம். இனி எதிர்காலத்தில் - எந்தச் சந்தர்ப்பத்திலும் - இனக்கலவரம் ஏதும் இடம்பெறாது என்று நம்புகின்றோம்.

தற்போது இடம்பெற்ற கலவரங்களைப் பயன்படுத்தி சில முஸ்லிம் அரசியல்வாதிகள் லாபம்தேட முயல்கின்றனர். இத்தகைய அரசியல்வாதிகளின் அறிக்கைகள் முஸ்லிம்களைத் தூண்டிவிட்டு அதன்மூலம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தவிடாமல் தடுக்கச்செய்யும் நோக்கம் கொண்டவை. தங்கள் அரசியல் தலைமைத்துவத்தைத் தக்கவைப்பதற்காக இந்தக் கலவரங்களைப் பயன்படுத்தி, முஸ்லிம்கள் மத்தியில் ஓர் ஆயுதப் போராட்டத்தைத் தூண்டிவிடும் வகையிலான அறிக்கைகளை அவர்கள் வெளியிடுகின்றனர். இந்தப் போக்கு ஒப்பந்த ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஆரோக்கியமானதாக இருக்காது.

எனவே, புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் எந்தவிதமான சம்பவமும் எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் இடம்பெறாது என நாம் நம்புகின்றோம் - என்றார் கரிகாலன்.(ஓ)

### மண்டைதீவுப் பகுதியில்

## படைஅதிகாரி - பொதுமக்கள் இன்று கலந்துரையாடல்

மண்டைதீவு கடற்படைக் கட்டளை அதிகாரி, அவ்வூர் பொதுமக்களுடன் முக்கியமான கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளவதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மண்டைதீவு மகாவித்தியாலயத்தின் மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

அண்மையில் இங்கு மீளக்குடியேறிவரும் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் குடியிருப்பு, அத்தியா வசிய தேவைகள் என்பவற்றைக் கேட்டறிந்து கொள்வதற்காகவும்-

எதிர்வரும் இருபத்து மூன்றாம் திகதி ஆரம்பமாக இருக்கும் புனித சம்பேதுருவானவர் ஆலய உற்சவம் தொடர்பான ஒழுங்குகளை மேற்கொள்வதற்காகவும்- இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மேலும் மீளக் குடியமர்ந்த பின்பும் பாடசாலை செல்லாது வீடுகளில் தங்கி இருக்கும் மாணவர்கள், மரங்கள் விறகிற்கு வெட்டப்படுவது ஆகியவை தொடர்பாகவும் ஆராயப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட அல்லது பொதுப்பிரச்சினைகள் சம்பந்தமாக முறைப்பாடு செய்யவேண்டி இருப்பின், தீவுக்கு வெளியில் இடம்பெயர்ந்து வசிப்பவர்களும் இக்கூட்டத்தில் பங்குகொள்ள அனுமதிக்கப்பட்டுவர் என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது.

(ஓ-ரி)

### சட்டத்தரணிகள் சங்க ஏற்பாட்டில்

## சட்ட உதவி வழங்கும் நிகழ்வு இராமநாதன் கல்லூரியில்

### ஞாயிறன்று நடைபெறும்

இலவச சட்ட உதவி வழங்குவது தொடர்பான கூட்டம் ஒன்று நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்ட உதவிமன்றம் ஏற்பாடு செய்துள்ள இந்தக் கூட்டத்தில் வடக்கு - கிழக்கு மற்றும் புத்தளம், கொழும்புப் பகுதிகளைச் சேர்ந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் சட்டத்தரணிகள் பங்குகொள்வர்.

இந்தக் குழுவினர் இடம்பெயர்ந்தோர், மீளக்குடியமர்ந்தோர், குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்டோர், மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டோர், முதியோர் மற்றும் வெளிநாடுகளில் பணிபுரிந்து பாதிக்கப்பட்ட பெண்கள் ஆகியோரில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட அனைவருக்கும் தேவையான சட்ட உதவிகளை வழங்குவர்.

அத்துடன் இடம்பெயர்ந்தவர்கள், மீளக்குடியமர்ந்தோர், வறுமைக்கோட்டுக்கு உட்பட்டோர் ஆகியோருக்கு தேசிய அடையாள அட்டை, பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்கள் எடுத்துக்கொடுக்கப்படவுள்ளதாகவும் -

இலவசமாக திருமணப் பதிவுகள் செய்துகொடுக்கப்படும் என்றும் -

மேற்படி சட்ட உதவிகளை பெறவிரும்வோர் அன்றைய தினம் காலை 10 மணிக்கு இராமநாதன் கல்லூரிக்குச் சமூகமளிக்க வேண்டும் என்றும் -

சட்ட உதவிமன்றம் விடுத்த செய்திக குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேவைப்படுமிடத்து சட்ட உதவி மன்றத்தினால் இலவசமாக வழக்குகள் நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ)

## ஆள்களைக் கடத்தும் 'மையம்'

சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு ஆள்களைக் கடத்திச் செல்லும் வியாபாரத்தில் மத்திய ஆசிய கேந்திர நிலையமாக இலங்கை விளங்குகின்றது என இரகசியப் பொலீஸாரின் விசாரணைகள்மூலம் தெரியவந்துள்ளது.

கடந்த நான்கு மாதங்களில் 739 பேர் இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக வெளியேறியுள்ளனர். சுமார் 150 பேரை பொலீஸார் கைதுசெய்துள்ளனர் எனச் சிரேஷ்ட பொலீஸ் அதிபர் டி.எஸ்.வை.சமரதுங்க தெரிவித்தார்.

இந்த ஆள் கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கும், மாவியா குழுவினருக்கும் தொடர்பு இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. (ஓ)

### நாளை

ஆடி04
சனிக்கிழமை
(20.07.2002)
திதி : ஏகாதசி
மாலை 5.53 வரை.
நட்சத்திரம்: அனுஷம்
முன்னிரவு 7.58 வரை
சயன ஏகாதசி விரதம்
சுபநேரம் : 3.01 - 4.31
ராகுகாலம் : 9.01 - 10.31
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

வேலைக்குத் தகுதியானவரைத் தேர்ந்தெடுப்பது ஒரு கலை.

## குடாநாட்டு மீனவருக்கு அ.அட்டை வழங்க ஏற்பாடு

### பாஸ் நடைமுறை நீக்கப்படும்

யாழ்ப்பாணம்,ஜூலை19

யாழ்.மாவட்டத்திலுள்ள கடற்றொழிலாளர்கள் கடற்றொழிலுக்குச் செல்வதற்கு கடற்றொழில் சங்கங்களினாலும், பாதுகாப்புப் படையினராலும் இதுவரை இணைந்து வழங்கப்பட்டு வந்த பாஸ் நடைமுறை நீக்கப்படவுள்ளது.

இதற்குப் பதிலாக யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம் கடற்றொழிலாளர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்க முன்வந்துள்ளது.

இந்த அடையாள அட்டை வைத்திருப்பவர்களை மட்டுமே கடற்றொழிலுக்குச் செல்ல அனுமதிப்பது என அண்மையில் யாழ்.அரச அதிபர் தலைமையில் படை அதிகாரிகளுக்கும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளுக்குமிடையில் இடம்பெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி திணைக்களம் அடையாள அட்டைக்கான மாதிரி விண்ணப்பப் படிவத்தினையும், சம்பந்தப்பட்ட பகுதி கிராம சேவையாளரால் வழங்கப்படவேண்டிய சிபார்சுப் படிவத்தின் பிரதியையும் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைத்துள்ளது.

அடையாள அட்டைகளை வழங்குவதற்குரிய விண்ணப்பப் படிவங்கள் அந்தந்தப் பிரிவு கடற்றொழில் பரிசோதகர்களிடம் வழங்கப்பட்டுள்ளதாகவும் -

கடற்றொழிலாளர்கள் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறு - அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-எ-100-117)

## தமிழீழ காவல்துறை
## வேலை வெற்றிடங்கள்

தமிழீழ காவல்துறையில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தங்கள் வசமுள்ள சான்றிதழ்களுடன் பளை காவல் பணிமனையில் நேற்று 18.07.2002 முதல் 28.07.2002 வரை நேரில் சமுகந்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**01.உப பரிசோதகர் (SUB INSPECTOR)**

*கல்வித் தகைமை:* க.பொ.த.சாதாரணதரத்தில் தமிழ், கணிதம்/எண்கணிதம் உட்பட 5 பாடங்களில திறமைச்சித்தியுடன் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

*வயது:* 20 தொடக்கம் 30 வரை.

*உயரம்:* 5 அடி 6 அங்குலத்துக்கு மேல்.

**02. காவலர் (POLICE CONSTABLE)**

*கல்வித் தகைமை:* க.பொ.த. சாதாரணதரத்தில் தமிழ், கணித பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

வயது: 20 தொடக்கம் 30 வரை.

உயரம்: 5 அடி 6 அங்குலத்துக்கு மேல்.

**03.எழுதுவினைஞர்கள் (CLERKS)**

*கல்வித் தகைமை:* க.பொ.த. சாதாரணதரத்தில் தமிழ், கணிதம்/எண்கணிதம் உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்தியுடன் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். க.பொ.த. (உயர்தரம்) சித்தியடைந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

*வயது:* 20 முதல் 30 வரை.

*உயரம்:* 5 அடி 6 அங்குலத்துக்கு மேல்.

*மேற்கூறிய பதவிகளுக்கு தங்குமிட வசதி, உணவு, சீருடை, போக்குவரத்து, மருத்துவம் என்பன வேதனத்துடன் மேலதிகமாக வழங்கப்படும்.*

பொறுப்பாளர்,
ஆளணிப் பிரிவு, காவல்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

(சி-22957)


## காவல்பணிமனை அதிகாரி அறிவிப்பு

தென்மராட்சி,ஜூலை19

பளை இத்தாவில் பகுதிகளில் திருட்டுச் சம்பங்கள் இடம்பெற்றதாகத் தமிழீழ காவல் பணிமனையில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதையடுத்து காவல் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி சம்பவங்கள் தொடர்பாக பொருள்கள் எதனையும் இதுவரை காவல்துறையினர் மீட்கவில்லை என்றும் -

பொருள்கள் மீட்கப்பட்டதும் அதுபற்றி பத்திரிகைகள் மூலம் அறிவிப்பதாகவும் -

திருட்டு குறித்து முறையிட்டவர்கள காவல் பணிமனைக்கு அதுவரை வர அவசியமில்லை என்றும் -

காவல்பணிமனைப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (ஒ-117)

## மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டன

சண்டிலிப்பாய்,ஜூலை19

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம், சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் அனுசரணையுடன் அண்மையில் சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்க மண்டபத்தில் இலவச கண் பரிசோதனை முகாமை நடத்தியது. கண்பார்வை குறைந்த 307 பேருக்கு இந்த முகாமில் மூக்கு கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டன. (ஒ-135)

## பொதுசன உதவிப்பணம்

நவாலி,ஜூலை19

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களினதும் மற்றும் தொழுநோய், காசநோய், புற்றுநோய், என்பவற்றுக்கான உதவிப் பணத்தினைப் பெற்றுக்கொள் பவர்களினதும் ஜூலை மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் அந்தந்த தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் -

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (எ-100)


## பிராந்திய கோழிப்பண்ணை - அச்சுவேலி
## புதிய இனக்கோழிக்குஞ்சு விநியோகம

எமது இன விருத்திப்பண்ணையில், பிரான்ஸ் நாட்டு தாயினக் கோழிகளில் இருந்து அடைவைத்துப் பொரிக்கப்பட்டு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் தரநிர்ணயம் செய்யப்பட்ட ஒருநாள் கோழிக்குஞ்சுகள் 20-07-2002இல் இருந்து வாரம் தோறும் கால்நடை வளர்ப்போருக்கு அந்தந்தப்பகுதி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக விநியோகிக்கப்படவுள்ளன.

எனவே, தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு உங்கள் பகுதி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களுடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொண்டு கோழிக்குஞ்சுகளைப் பெற்றுக்கொள்ளவும்.

பொது முகாமையாளர்,
யாழ். மாவட்ட கூ. கி. வ. சமாசம்

75, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/22959)



புதிய
போரோ சொப்ட்




மிருதுவான, தூய்மையான, அழகிய சருமத்திற்கு கற்றாளைச்சாறு, கொகும்பட்டர், கிளிசரின் அடங்கிய வாசனை சோப்.
சகல விதமான சருமங்களுக்கும் ஏற்ப சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது.

ஏக விநியோகஸ்தர்:-
JEGHAN PHARMACY.
NO.452/B,HOSPITAL ROAD,
JAFFNA. TEL.021-2194,3191

சந்தைப்படுத்துவோர்
PHARMCO
MARKETING SERVICES (PVT) LTD.

(C/22970)



## சைக்கிள் என்று கேட்காதீர்கள்
## லுமாலா என்று கேட்டு வாங்குங்கள்!

இலங்கையில் 20 வருடத்திற்கும் மேலாகஅனைவரது மனதிலும் தனக்கென்று ஒரு தனி இடத்தை பெற்றுக்கொண்ட ஒரே ஒரு சைக்கிள் லுமாலா.



அனைத்து உதிரிப்பாகங்களையும் எவ்வேளையிலும் இலங்கையின் எப்பாகத்திலும் தங்குதடையின்றி அனைவரும் பெற்றுக் கொள்ளலாம்.



பத்து வருடகால உறுதியான உத்திரவாதம் அளிக்கப்படும்.

ஜப்பானிய தொழில் நுட்பத்துடனான ஒரே ஒரு சைக்கிள்

10 YEARS WARRANTY Japanese Technology

THE LUMALA CYCLE

Lumala
Bicycles supreme

மேலதிக விபரங்களுக்கு
CITY CYCLE INDUSTRIES
117 & 119 Dam Street, Colombo - 12
Tel : 432745, 433845 Fax : 449478

(C/22897)

# இனக்கலவரங்களில் ஈடுபட்டவர்களில் ஒருவர் கூடத் தண்டிக்கப்படவில்லை!

## இதுவே இந்நாட்டின் சாபக்கேடு என்கிறார் வவுனியா நீதிவான்

**வவுனியா மாவட்ட முன்னாள் மேல்நீதிமன்ற நீதிபதி நடனசிகாமணி யோகசிகாமணியின் நினைவுப் பேருரை நிகழ்வு அண்மையில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.**

**கொழும்பு பல்கலைக்கழக மனித உரிமைகள் நிலையத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் நினைவுப் பேருரை நிகழ்த்தினார். கல்லூரி அதிபர் திருமதி நா.மாணிக்கவாசகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நீதிவான் எம்.இளஞ்செழியன் நிகழ்த்திய அந்த உரையின் தொகுப்பு இது.**



நீதிவான் எம்.இளஞ்செழியன்

1978 ஆம் ஆண்டு அரசமைப்புச் சட்டத்தின் அத்தியாயம் 3இல் மனித உரிமைகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஒரு மனிதனின் உரிமை மீறப்படுகின்றபோது, பிரிவு 126 இன் கீழ் ஒருமாத காலத்தில் இலங்கையின் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படும்போது அவருக்கு உயர் நீதிமன்றம் நிவாரணம் வழங்கும் என்ற ஏற்பாடு அங்கு காணப்படுகின்றது.

இந்த ஒருமாதகால இடைவெளி வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்குப் பொருத்தமானதா என பதைச் சிந்திக்க வேண்டியுள்ளது. இன்று வவுனியாவில் பாஸ் நடைமுறை இல்லை. இந்தப் பாஸ் நடைமுறை அனைத்தும் சட்டவிரோதமானவை; சட்டத்திற்கு முரணானவை. ஆனால், எந்தவொரு பிரஜையாவது கொழும்பு உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துவிட்டு இங்கு வந்து நிம்மதியாக வாழக்கூடிய சூழ்நிலை உண்டா?

கொழும்புக்குச் செல்வதற்கு இராணுவம் காரணம் கோருகின்றது. இராணுவத்தினருக்கும் பொலீஸாருக்கும் எதிராக நான் அடிப்படை மனித உரிமைமீறல் வழக்குத் தாக்கல் செயவதற்காகக் கொழும்புக்குச் செல்கிறேன் எனக் கூறிவிட்டு இங்கிருந்து செல்லமுடியுமா? பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றுத்தான் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்லவேண்டும். இந்தச் சூழ்நிலையில், எனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுவிட்டதெனக் கூறி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு இந்த ஒருமாத காலத்தில் கொழும்புக்குச் செல்வதற்குள் எமது பல உரிமைகள் மீறப்பட்டுவிடும்.

இலங்கை அரசமைப்புச் சட்டத்தில் மனித உரிமைகள் ஏற்பாடுகள் உள்ளன. ஆனால், வாழ்க்கைச் சுதந்திரம் (Right to Life) உள்ளடக்கப்படவில்லை என்பது பெரிய குறைபாடாகும்.

இலங்கையில் மனித உரிமைகள் சம்பந்தமான எழுச்சி அலை யுத்தம் காரணமாக எழுந்ததாகும். யுத்தம் நடக்கும்போது சட்டம் தானாகவே உறங்கும் என்பார்கள். சட்டம் தூங்கும்போது அராஜகம் தலைத்தோங்கும், அராஜகம் தலைத்தோங்கும்போது மனித உரிமை மீறல்கள், உயிர்ச் சேதங்கள் எனப் பலவகைப்பட்ட மீறல்கள் ஏற்படும்.

மக்கள் மத்தியில் சட்டம் பற்றிய அறிவு இருத்தல் அவசியம். மனித உரிமைகள் எவை என்பவை தெரிந்திருத்தல் அவசியம். மனித உரிமைகள் மீறப்பட்டால் எந்த நீதிமன்றத்திற்குச் செல்லவேண்டும் எனத் தெரிந்திருத்தல் வேண்டும். மனித உரிமைகள் என்பது ஒரு கல்விப் போதனையாக மட்டும் கற்றல் கூடாது. அவற்றை நடைமுறையில் சாதிப்பவனே மனித உரிமைவாதி ஆவான். புத்தகங்களில் மனித உரிமை பிரகடனங்கள் செய்யப்பட்டுள்ளன. உரிமைகள் மீறுபவர்கள் அவற்றை மதிப்பதில்லை. அவ்வாறு மீறுபவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தக்க தண்டனை வழங்கினால் மனித உரிமை மீறல்கள் குறையும்.

யுத்தம் நடைபெறும்போது பெண்கள் கூடுதலாகப் பாதிக்கப்படுகின்றார்கள். பாலியல் வல்லுறவு, பாலியல் துஷ்பிரயோகங்கள் மற்றும் சித்திரவதைகள் என்ற பலவிதங்களில் பாதிக்கப்பட்டுள்ளனர். இங்கே மன்னார் கமாலிற்றா கற்பழிப்புக் கொலை வழக்கு, யாழ்ப்பாணம் கிருசாந்தி கொலை, புங்குடுதீவு சாரதாம்பாள் கொலை, அம்பாறை கோணேஸ்வரி கொலை என்பன முக்கியத்துவம் வாய்ந்தவை. இதில் கிருசாந்தி கொலை தவிர்ந்து மற்றைய வழக்குகள் இழுபறி நிலையிலுள்ளன. சித்திரவதைகள் இலங்கையில் மிக மோசமாக இடம்பெற்றுள்ளது. தடுப்புக் காவல் சித்திரவதைகள் முன்னிடத்தைப் பிடித்திருக்கின்றன. இலங்கை உயர் நீதிமன்றம் சித்திரவதை சம்பந்தமாகப் பல தீர்ப்புகளை அளித்துள்ளது. இன்று சித்திரவதைச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. சித்திரவதைக் குற்றத்துக்கு 7 வருட சிறைத் தண்டனை விதிக்க சட்டத்தில் ஏற்பாடு உள்ளது. ஆனால், இலங்கையில் இதுவரையில் ஒரு வழக்கில்கூட சித்திரவதைகளில் ஈடுபட்டவர்களுக்குத் தண்டனை வழங்கப்படவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானதாகும். சித்திரவதை செய்பவர்களுக்கு எதிராகத் தண்டனை வழங்கமுடியும் என்று சட்டப் புத்தகத்தில் உள்ளது. அதை நடைமுறைப்படுத்த அரக முன்வரவில்லை; அரச அதிகாரிகளும் முன்வரவில்லை. இந்தச் சட்டத்தை இறுக்கி நடைமுறைப்படுத்தினால் சித்திரவதை மீறலைத் தடுத்துநிறுத்தமுடியும்.

புதைகுழி வழங்குகளில் இலங்கையில் செம்மணி வழக்கு முக்கியமானது. சர்வதேச ரீதியாக பொஸ்னியா, ருவாண்டா, கிழக்குத் தீமோர் என்று பல புதைகுழி வழக்குகள் நடைபெற்றன. அந்த வழக்குகளில் பங்குபற்றிய சர்வதேச நிபுணர்கள் இலங்கையில் செம்மணிப் புதைகுழி வழக்கைப் பார்வையிட வந்தனர். புதைகுழிகள் இனப்படுகொலையின் அத்திவாரமாகும். இது சர்வதேச குற்றமாகும். சட்டம் புதைகுழியில் புதைக்கப்பட்டதற்கு இது நல்ல உதாரணமாகும்.

மனிதாபிமானச் சட்டங்கள் யுத்த காலத்தில் கடைப்பிடிக்கப்பட வேண்டும். கண்மூடித்தனமான விமானக் குண்டு வீச்சுக்கள் நிறுத்தப்படவேண்டும். ஆலயங்கள், அகதிமுகாம்கள், வைத்தியசாலைகள், போர்முனைகளில் இருந்து விலக்கி வைக்கப்படவேண்டும் என மனிதாபிமானச் சட்டம் கூறுகின்றது. இங்கு மனிதாபிமானச் சட்டத்தைச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு திறம்படச் செய்து வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

மாணவர்கள் மத்தியில் இன்று மனித உரிமைகள் எழுச்சி ஏற்பட்டுள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது. பெருந்தொகையான மாணவர்கள் சட்டம் பயிலவேண்டும். பலர் சட்டத்தரணிகளாக, நீதிபதிகளாக வந்து சமூகத்துக்குச் சேவை செய்ய வேண்டும் என்று ஆதங்கம் உள்ளது. ஆனால், இன்று சட்டக் கல்லூரிகளில் தமிழ்பேசும் மாணவர்கள் தெரிவு குறைவாகவுள்ளது. இதற்குக் காரணம் மாணவர்கள் திறமைச் சித்தி பெறவில்லை என்பதாகும்.

இதற்குப் போர் மூலகாரணமாகும். போரினால் எத்தனையோ பாடசாலைகள் பாதுகாப்புப் படைமுகாம்களாகியுள்ளன. எனவே, இங்கு அடிப்படையில் மற்றைய இனத்தவருடன் போட்டி போட்டு முன்னணியில் வருவது இலகுவான காரியமல்ல. இதுதான் நியதி, இதுதான் வாழ்க்கை என்றாகி விட்டது. இருப்பினும், போர் முனையில் பேனாவுடன் போட்டி போட்டு கல்விகற்று முன்னணியில் வரவேண்டும். மனித உரிமைக் கல்வியை எல்லோரும் பயில வேண்டும்.

வவுனியாவில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழகத்தின் வளாகத்தில் சட்டபீடத்தைத் திறப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். ஏனெனில் வவுனியா கேந்திர முக்கியத்துவமிக்க ஓரிடத்தில் இருப்பதாலும் கொழும்புக்கு இலகுவாகச் செல்லக்கூடிய பூகோள அமைப்பில் இருப்பதாலும் வவுனியா வளாகத்தில் சட்டபீடத்தை உருவாக்குவதற்கும் வவுனியா வளாகத்தை ஒரு பல்கலைக்கழக அந்தஸ்திற்கு உயர்த்துவதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

மக்கள் சமூக, கலாசார ஒழுங்குமுறையுடன் வாழவேண்டுமென்பது முதன்மையானது. அதிலும் சட்ட ஒழுங்குக்கு உட்பட்டு வாழவேண்டுமென்பது அதைவிட முதன்மையானது. சட்ட ஒழுங்கைக் கடைப்பிடிக்காத சமுதாயம் காட்டுமிராண்டித்தனத்துக்கு இட்டுச் செல்லப்படும். இது சட்டம், இது நீதி, இது நியாயம். இவற்றைச் செய்தால் தண்டனை அனுபவிக்க நேரிடும் என மக்கள் தெரிந்து வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். சட்ட ஒழுக்கமற்ற வாழ்க்கை சமுக கலாசாரத்தையும் பண்பாட்டு விழுமியங்களையும் அழித்துவிடும்.

அண்மையில் நடைபெற்ற கலவரங்களைப் பாருங்கள். இந்தக் கலவரங்களை அடக்குவதற்கு இலங்கையில் சட்டங்கள் இல்லையா? ஒரு நீதிவான், ஓர் அரசாங்க அதிபர் வீதியில் வந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ய உத்தரவு பிறப்பிப்பதற்குச் சட்டத்தில் இடமுண்டு. அனைத்தையும் கொளுத்தி நாசமாக்கிய பின்னர், உயிரழிவுகள் ஏற்பட்டதன் பின்னர் போய்நின்று பாதுகாப்புக் கொடுப்பது அர்த்தமற்றது. யாரிலும் பிழை இருக்கலாம் அது அவசியமில்லை. ஆனால், இலங்கையில் அனைத்துச் சட்டங்களும் குற்றவியல் நடவடிக்கை கோவையில் கலவரங்களை அடக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கலவரங்கள் ஏற்படுகின்றன, மனித உயிர்கள் இழக்கப்படுகின்றன, உடைமைகள் எரிக்கப்படுகின்றன. இவற்றின்மூலம் அதியுச்ச மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றது. சட்டம் தூங்குகின்றது, நீதி செத்துக்கொண்டிருக்கிறது. அராஜகங்கள் புரிபவர்களின் கைகள் ஓங்குகின்றன, மக்கள் இடம்பெயர்கின்றார்கள், வன்செயலாளர்கள் மற்றவர்களின் அழிவில் சுகம் காண்கின்றார்கள், பாதுகாப்புக் கேள்விக்கு உட்படுத்தப்படுகிறது. இது இலங்கையின் தலைவிதியாகும்.

ஏனெனில், இலங்கையில் முதன் முறையாக 1956இல் இனக்கலவரம் ஏற்பட்டபோது எத்தனை உயிர்கள் அழிக்கப்பட்டன? எவ்வளவு உடைமைகள் அழிக்கப்பட்டன? ஆனால், இவற்றில் சம்பந்தப்பட்டவர்கள் எத்தனை பேர் நீதியின் முன்னால் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட்டார்கள்? இந்த வன்செயல்களில் சம்பந்தப்பட்ட ஒருநபர்கூட நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தப்படவில்லை; தணடிக்கப்படவுமில்லை. அதன் பின்னர் 1977, 1983ஆகிய ஆண்டுகளில் மீணடும் இனக்கலவரங்கள் வெடித்தன, எத்தனையோ உயிர்கள் இழக்கப்பட்டன, எத்தனையோ உடைமைகள் அழிக்கப்பட்டன. ஆனால், இந்தக் கலவரங்களில் சம்பந்தப்பட்டவர்களில் ஒருவர்கூட இன்னும் நீதிமன்றத்தினால் தண்டிக்கப்படவில்லை.

ஏன் 1983ஆம் ஆண்டு நீதிபதியின் உத்தரவில் 53 சிறைக்கைதிகள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார்கள். இது நீதிமன்றத்தின் உத்தரவு. அந்த 53 சிறைக்கைதிகளும் சிறையில் வைத்து கொல்லப்பட்டார்களே. அங்கே நீதிபதியின் உத்தரவு மீறப்படவில்லையா? சிறைச்சாலையில் நடைபெற்ற இந்தக் கொலைச்சம்பவங்களின் மூலம் நீதிமன்றம் அவமதிப்புக்கு உட்படுத்தப்படவில்லையா? ஆனால், அந்த 53 கொலைகளுக்கும் இந்த நாட்டில் இன்றுவரையிலும் நீதி கிடைக்கவில்லை. இந்தப படுகொலைகளுக்குக் காரணமானவர்கள் ஒருவர்கூட நீதிமன்றத்தில் நிறுத்தப்படவில்லை. நீதிமன்றம் தான் தடுத்து வைத்திருந்த பிரஜைகளுக்கு அப்போது பாதுகாப்பு கொடுக்கத் தவறிவிட்டது. நீதிமன்றக் காவல் என்பது மனித உரிமை மீறுவதைத் தடுக்கும் செயல். ஆனால், அங்கு உயிர்க் கொலை இடம்பெற்றது. எனினும், அதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை. இதன் விளைவுகள்தான் கலவரங்களில் மனிதஉரிமைகள் மீறப்படுகின்றன.

கிழக்கு மாகாணத்தில் ஒரு கிலோ மீற்றருக்கு ஓர் இராணுவ முகாம் அல்லது பொலீஸ் நிலையம் உள்ளது. கலவரங்கள் மூளும்போது குற்றவியல் நடவடிக்கைக் கோவை, பொலீஸ் கட்டளைச் சட்டம் என்பவற்றின் மூலம் கலகக்காரருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். ஊரடங்குச் சட்டம் பிறப்பித்து மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். ஊரடங்கு சட்ட வேளையில் இடம்பெறும் வன் செயல்களை இரும்புக்கரம் கொண்டு அடக்கி சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். பத்துப் பேருக்குத் தண்டனை வழங்கினால் கலவரங்களில் ஈடுபடுபவர்களுக்கு ஒரு பாடமாக இருக்கும்.

ஆனால், இலங்கையில் கலகக்காரர்கள் கைதுசெய்யப்படுவதில்லை. சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவது குறைவு. கலகக்காரர்களுக்கு அன்றே தண்டனை விதிக்கப்படுவதில்லை. பொலீஸார் செய்ய வேண்டியது இதுதான். எந்த இனம், மதம், மொழியாக இருந்தாலும் வன்செயல்கள், கலவரங்களில் ஈடுபடுபவர்களை உடனடியாகக் கைதுசெய்து சட்டத்தின் பிடியில் நிறுத்தவேண்டும்.

எந்த அரசியல் சக்தியோ அல்லது வன்முறை சக்தியோ பின்னுக்கு நின்றாலும் அவர்கள் பகிரங்கப்படுத்தி கலவரத்திற்கு உதவி, உடந்தையாக இருந்தவர்களைக் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும்.

கலவரங்களில் ஈடுபடுபவர்கள் மன்னிக்கப்படமுடியாதவர்கள். அப்பாவி மக்களின் உயிர், உடைமைகளை அழிப்பவர்களும் மன்னிக்கப்பட முடியாதவர்கள். எந்த இனத்தவராக இருந்தாலும் கலகக்காரர்களையும் வன்முறைக்காரர்களையும் கைதுசெய்து நீதியின் முன் நிறுத்த வேண்டும் என்று நீதிமன்றங்கள் அதிரடி உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டும். அப்போதுதான் நீதி மலரும். இல்லாவிடில் கலவரம் கட்டுப்பாட்டில் கொண்டுவந்ததின் பின்னர் வன்செயலில் ஈடுபட்டவர்கள், கொலைகள் செய்தவர்கள், கொலை முயற்சிகளில் ஈடுபட்டவர்கள், ஆள் கடத்தலில் ஈடுபட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படாவிட்டால் மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் எப்பொழுது ஏறும் என்ற ஏக்க நிலைமையே மக்கள் வாழ்க்கை நிலையாகிவிடும்.

யுத்தத்தின்போது அமைதியில்லை. சமாதானத்தின்போதும் அமைதியில்லை. பாதுகாப்பு கேள்விக்குறியாகிறது. அப்பாவி மக்கள் வாழ்வதற்கே அஞ்சுகிறார்கள். இந்நிலையில் சட்டத்தை இறுகக் கடைப்பிடிக்க வேண்டும். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுபவர்கள் நடுநிலையாளராகக் கடமையாற்ற வேண்டும். இனம், மதம், மொழி, பாசம் என்பன கடமைசெய்யும் அதிகாரிகளுக்கு இருக்கக்கூடாது.

கடமை செய்யத்தவறும் அதிகாரி உடனடியாகச் சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டிக்கப்படவேண்டும். கலகத்தில் ஈடுபட்டவர்களையும் வன்செயலாளர்களையும் கைதுசெய்யாமைக்குக் காரணம் கோரப்படவேண்டும். சட்டத்தின் முன் வன்முறையாளர்கள் நிறுத்தப்படவேண்டும். இதுதான் அப்பாவி மக்களுக்குச் செய்யும் உதவியாகும். ★

## ஒருங்கிணைப்பு குழுத்தலைவராக அமைச்சர் மகேஸ்வரன் நியமனம்

கொழும்பு,ஜூலை19

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இந்து கலாசார அமைச்சருமான தி.மகேஸ்வரன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் நேற்றுமுன்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதிமூலம் மேற்கொள்ளும திட்டங்கள் உட்பட ஏனைய திட்டங்களை வழிநடத்தும் இந்தக் குழுவின் கூட்டம் விரைவில் யாழ்.செலயகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் குழுவில் யாழ்.மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெறுவர்.

அத்துடன் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அரச அதிபர், திணைக்களத் தலைவர்கள், பிரதேச சபைத் தலைவர்கள் பங்குபற்றி தமது திட்டங்களை முன்வைப்பர்.

(ஒ-3)

## சிறுமி மரணம்!

யாழ்ப்பாணம்,ஜூலை19

நவாலிப்பகுதி ஆலயம் ஒன்றில் கிணற்றில் கால்கழுவச் சென்ற நவாலியைச் சேர்ந்த ராசசிங்கம் றெஜிரேக்கா (வயது9) என்ற சிறுமி மரணமானார். நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

நவாலி அட்டகிரி கந்தசுவாமி கோயிலுக்கு அருகிலுள்ள குளத்துக்குள் அமைந்துள்ள கிணற்றில் கால் கழுவுவதற்காக பிரஸ்தாப சிறுமி சென்றதாகவும்-

அச்சமயம் தவறிக் கிணற்றில் வீழ்ந்து மரணமானார் என்றும்- விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

வேலணை 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆனந்தன் - சுகந்த விநாயகனின் தே.அ.அ. (இல.740132946V), வி.அ.அட்டைகள் என்பன ஓட்டுமடத்திற்கும் நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் க.கதிரவேல், சன்லைற் றைக் கிளீனர், பெரியகடை வீதியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (6124)

சித்தன்கேணியைச் சேர்ந்த செ.விமலேந்திரன் (விமலன்ஸ்) என்பவரின் ஓட்டோ சாரதி அனுமதிப் பத்திரம், நடப்பாண்டுக்கான வரி, காப்புறுதி என்பன யாழ்ப்பாணத்துக்கும் ஆனைக்கோட்டைக்கும் இடையில் 10.07.2002இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தபால் அதிபர், சித்தன்கேணி அல்லது யாழ்ப்பாணம ஜெயகிருஷ்ணா ஜுவல்லர்ஸில் ஒப்படைத்து உதவவும். (6115)

22,இராமநாதன் வீதி, நாயன்மார்கட்டைச் சேர்ந்த அ.ஜீவழகன் என்பவருடைய தே.அ.அ (இல.813361655V) முகமாலையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள முகவரியில் ஒப்படைத்து உதவவும். (6118)

[illegible]02 செவ்வாய்க்கிழமை மானிப்பாய் பகுதியில் தாலிக்கொடி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மானிப்பாயிலுள்ள தினேஸ் பேக்கரியில் கொடுத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (6113)

பங்களா லேன், மல்லாகத்தைச் சேர்ந்த நடராசா வசந்தி ஆகிய எனது தே.அ.அ. (இல.728040327V)யும் வி.அ.அ.(இல.0907022483)யும் யாழ்.பஸ் நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (6128)

சின்னராசா பராசக்தி என்பவருடைய தே.அ.அ. (இல.445530247V), வி.அ.அ.(இல.0907007161) என்பன இணுவில் கந்தசாமி கோயிலுக்கும் தாவடிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து விநாயகர் தொலைத் தொடர்பு நிலையம், தாவடிச்சந்தி, தாவடி என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். (6138)

நயினாதீவு 5ஆம் வட்டாரம் காளி கோயிலடி முகவரியிலுள்ள சண்முகநாதன் சிவபாக்கியம் என்பவரின் தே.அ.அ. (இல.357490685V), வி.அ.அ. 2002.07.12 இல் யாழ்ப்பாணத்திற்கும் கொக்குவிலுக்கும் இடை[illegible] பேருந்தில் தவறிவிட்டன[illegible]த்தவர்கள் சி.கார்த்திகேசு, [illegible] கே.கே.எஸ். வீதி, கொக்குவில் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (6142)

## விற்பனைக்கு

புறொயிலர் மற்றும் இறைச்சிக் கோழிகள் மிகவும் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் தினமும் சுத்தம் செய்து எவ்வேளையும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: Y.A. சுரேஸ், கிராமக்கோட்டடி, எரிபொருள் நிலையமுன் வீதியில் (150 மீற்றருக்குள்), பருத்தித்துறை. (சுத்தம் செய்தல் இலவசம்) (6108)

**மேசன் வேலையாள்கள்**

**தேவை**

**மேசன் வேலைக்கு ஆள்கள் தேவை. தகுதிக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.**

**மனோகரன் அன்ட் வெற்றிவேல்,**
**49, அம்பலவாணர் வீதி,**
**அத்தியடி,**
**யாழ்ப்பாணம்.** (6140)

## எச்.சி.ஐ.எம்.ஏ.பிரதிநிதிகள் யாழ். விஜயம்

ஹோட்டல் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ அமைப்பின் (H.C.I.M.A)யின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள ஹோட்டல பாடசாலைக்கு கொழும்பில் இருந்து வருகை தரவுள்ளது.

இக்குழுவினர் முற்பகல்11மணிக்கு ஹோட்டல் பாடசாலை மாணவர்களுக்கு செயலமர்வு ஒன்றை நடத்தவுள்ளனர். அதனைத் தொடர்ந்து பாடசாலைக்கென தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் 'வீடியோ' சாதனங்களை வைபவரீதியாக கையளிக்கவுள்ளனர். அத்துடன் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு சென்பற்றிக்ஸ் கலலூரி மாணவர்களுக்கு ஹோட்டல் பயிற்சிநெறியின் நன்மைகள் தொடர்பான செயலமர்வை அவர்கள் நடத்தவுள்ளனர். 7பேர் கொண்ட இக்குழுவின் அமைப்பின் தலைவர் எராஜ் அபயவர்தன, அமைப்பின் முன்னாள் தலைவர் பி.எம்.விதான ஆகியோரும வருகை தரவுள்ளதாக ஹோட்டல் பயிற்சிப் பாடசாலையின் உபஅதிபர் ஏ.கதிர்காமலிங்கம் தெரிவித்துள்ளார். (ஒ-10)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



| தாயின் மடியில் | ஆண்டவன் திருவடியில் |
|---|---|
| 10 - 01 - 1972 | 19 - 07 - 1999 |

**அமரர் கந்தசாமி விவேகானந்தர்**

**(பாபு)**

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வழிகாட்டி – எம்மை*
*வாழவைத்த தெய்வமே – எங்கள்*
*இதயக் கோயிலில் என்றென்றும் – உங்கள்*
*நினைவுத் தீபத்தை ஏற்றி வைப்போம்.*

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

- குடும்பத்தினர்

*குருநாதர் ஸ்ரோர்ஸ்,*
*உடுப்பிட்டி.*
(6051)

## பாராட்டும் வாழ்த்தும்



**திரு.வி.பரிபூரணானந்த சர்மா**

34 வருடங்கள் ஆசிரிய சேவையில் பணியாற்றி, 20.07.2002 ஆம் திகதி 60 வயதினைப் பூர்த்தி செய்து சேவையில் இருநது ஓய்வுபெறும் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை ஆசிரியர் திரு.வி.பரிபூரணானந்த சர்மா (இ.ஆ.சே.தரம்1) மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து கல்வி, சமூகப் பணிகளில் ஈடுபட இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அவருடைய கல்விச் சேவையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(C/22987) - நண்பர்கள் -

## கூடைப்பந்தாட்டப் போட்டி 2002

11 ஆவது வருடாந்த நிகழ்வாக யாழ். ஹற்றன் நஷனல் வங்கியினால் நடத்தப்படும் 2002 ஆம் ஆண்டுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டி கழகங்கள்/பாடசாலைகளுக்கிடையே யாழ். இந்துக்கல்லூரி ஆடுகளத்தில் நடைபெற்று வருகின்றன.

இன்றைய (19-07-02) வெள்ளிக்கிழமை ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள்

*மாலை 4.00 மணிக்கு*

**யாழ்.இந்துக்கல்லூரி** எதிர் **சென்.ஜோன்ஸ் கல்லூரி**

மாலை 5.00 மணிக்கு

**யாழ்.மத்திய கல்லூரி (A)** எதிர் **கொக்குவில் இந்துக்கல்லூரி.**

*அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் போட்டிகளைக் கண்டுகளிக்க வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

**ஹற்றன் நஷனல் வங்கி**

உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

(C/22980)

# மரண அறிவித்தல்கள்

## சின்னையா செல்வநாயகம்

### (தந்தை)

சுண்டுக்குளியை வசிப்பிடமாகக் கொண்ட சின்னையா செல்வநாயகம் (முன்னாள் ஊழியர் சாமுவேல் அன் சன்ஸ்) 16.07.2002 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுகிர்தவதியின் (மணி) அன்புக் கணவரும் சாந்தினி (கனடா), மதிவாணன் (கனடா), குமுதினி (கனடா) ஆகியோரின் அருமைத் தகப்பனாரும், மங்கையர்க்கரசி, லோககுகதாசன் (இளைப்பாறிய மின்சாரசபை ஊழியர்), குணசவுந்தரவல்லி (கொழும்பு), காலஞ்சென்ற திலகவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.07.2002) கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*16, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,*
*சுண்டுக்குளி,*
*யாழ்ப்பாணம்.* (6126)

*தகவல்:* சி.லோககுகதாசன (மைத்துனர்)

## வைரமுத்து செல்வரத்தினம

(கார் - செல்வரத்தினம் - சாவகச்சேரி நகரசபை முன்னாள் உறுப்பினர்)

சாவகச்சேரி, பெரியமாவடியைச் சேர்ந்த வைரமுத்து செல்வரத்தினம் அவர்கள் 16.07.2002 செவ்வாய்க்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் சிவானந்தம், நகுலாம்பிகை, காலஞ்சென்ற கணேசானந்தம் மற்றும் பரமானந்தம், அசோக்குமார், யசோதரன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ரோகினி, சிவயோகநாதன் (யாழ்.போதனா வைத்தியசாலை), கல்பனா, ஜெயந்தி, வதனி, பாலசுப்பிரமணியம் (யாழ்.போதனா வைத்தியசாலை), தங்கராசா (யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சபாரத்தினம் மற்றும் கமலாம்பிகை, புவனேஸ்வரி, கணேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கனகம்மா, தெய்வேந்திரம், சிவகுமார், வடிவேலு ஆகியோரின் மைத்துனரும் சிரோன், நிரோசன், திலீபன், பார்த்தீபன், பிரதீபன், அபனி, அபோனா, தன்சன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.07.2002) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணிக்கு அல்லாரை பொற்புலவு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பெரியமாவடி,*
*சாவகச்சேரி.* (6135)

*தகவல்:*
பரமானந்தம் (மகன்)
கருணாநிதி (வளர்ப்பு மகன்)


**HERO CYCLES**



சர்வதேசரீதியில் ISO சான்றிதழ் பெற்றதும் இலங்கையில் அதிகமாக விற்பனையாகும் பைசிக்கிளுமாகும்

எட்டு வருட காலம் உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ள ஒரே பைசிக்கிளாகும்

ஸ்டான்ட், ஸ்போட்ஸ் பைசிக்கிள்களுக்கு கரியர், லொக், பெல், ஸ்டான்ட் ஆகிய உதிரிபாகங்கள் இலவசமாக வழங்கப்படும்.

ஹீரோ பைசிக்கிள் வாங்குபவர்களுக்கு இலவசமாக சிங்கப்பூர் போய் வரவும், இருபதாயிரத்திற்கும் அதிகமான பரிசில்களை வெல்லக்கூடிய வாய்ப்புக்களும் உள்ளது

யாழ்ப்பாணத்தில்

[illegible]

Sole Agents

**HERO CYCLES**

**Faizal Hardware Stores**


74, Dam Street, Colombo 12.,
Phone : 433727,423273,384250-3

(C/22952)

சென்றது.

ா மேயும். (...........)


480 பழங்களின் விபரத்தை கீழே உள்ள
து. அதனை அவதானித்து சரியான
ாட்டில் எழுதுக.




ள்ள பழம் எது? ....................................
ள்ள பழம் எது? ....................................
வில் காணப்படுகின்றன?
..........................................................
பழங்கள் எத்தனை? ....................................

களில் இருந்து தெரிவுசெய்யக்கூடிய
க்கையை கோட்டில் எழுதுக.

38.



காணிகள ............ செவ்வகங்கள் ............

ப வெற்றிடங்களுக்குப் பொருத்தமான

0.

| 2 | 5 | 11 | 23 | |
|---|---|---|---|---|

பகுதி -2

நேரம்:- 1மணி 15 நிமிடம்

சித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு

ாயாடப் போறேன் - கையில்
தந்தனுப் பென்னை
ர மாட்டேன் - நல்ல
ற நாழிகையாச்சு

கொஞ்சம் - சாமி
ம் பூரதம் கட்டி
ணில் - சிறு
ந்துகள் செய்வோம்

ப பார்த்துப் பாடுவதாக அமைந்துள்ளது?
..........................................................
எதைத் தருமாறு கேட்கின்றான்?
..........................................................
ன்ன என்ன செய்வதாகக் கூறப்படுகிறது?
..........................................................
ல் என்ன செய்வதாகக் கூறப்படுகின்றது?
..........................................................
வர்கள்? ..........................................
ஒவ்வோர் உதாரணம் பாடலில் இருந்து

ால் சொல் ..........................................
ால் சொல் ..........................................
தன்மை வினைச்சொல்
..........................................................
தன்மைப் பெயர்ச்சொல்
..........................................................

ல் எழுதுக.
......... 11. பட்சணம் ..............................
ால் எழுதுக.
......... 13. தோழர் ..............................
க.
......... 15. அம்மா ..............................
..........................

பேச்சு வழக்கு மொழியாகும். இதன்
ல எழுதுக.

ளின் ஆங்கிலச் சொற்களை எழுதுக.
......... 19. வீடுகள் ..............................
......... 21. மரம் ..............................

யற்பாடு ஒன்றில் எரிதலுக்கும் வளிக்கும்
ர்பைக் கண்டறிவதற்குரிய பரிசோதனையை
தரம் 5 மாணவர்கள்டம் ஒவ்வொருவரும்
ம் ஒரு வெற்று ஜாம் போத்தலும் கொண்டு
ர். 48 பிள்ளைகள் உள்ள அந்த வகுப்பிலே
சிரியர் கூறியபடி பொருள்களைக் கொண்டு
ல் 5 பேர் மெழுகுதிரி ஒவ்வொன்று மட்டும்
றையோர் ஒரு பொருளையேனும் கொண்டு
கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
ர் கூறிய இருவகைப் பொருள்களையும்
..........................................................
ம் கொண்டு வராதோர் எத்தனை பேர்?


24. மொத்தமாக எத்தனை மெழுகுவர்த்திகள் வகுப்பிற்குக் கொண்டு வரப்பட்டன? ..........................................

25. ஒரு மெழுகுதிரியின் விலை ரூபா 3.50 எனில் மாணவர்களால் கொண்டுவரப்பட்ட மெழுகுவர்த்திகளின் மொத்தப் பெறுமதி எவ்வளவு? .............. ரூபா .............. சதம்

26. அந்த வகுப்பில் படிக்கும் அம்சன் எனும் மாணவன் இரு மெழுகுவர்த்திகளை வாங்குவதற்காக 10 ரூபாத் தாளினைக் கடைக்காரரிடம் கொடுத்தான். அவர் மீதிப் பணத்தை 4 சில்லறை நாணயங்களில் கொடுத்தார். அவர் மீதிப் பணமாகக் கொடுத்த நாணயங்களின் பெறுமதியை எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| | | | |

★ **அவ்வகுப்பு மாணவர்கள் செய்த பரிசோதனை அமைப்பைப் படம் காட்டுகின்றது.**



27. சிறிது நேரத்தின் பின்பு இவ்வமைப்பின்படி மெழுகுதிரியில் என்ன மாற்றத்தை அவதானிப்பீர்?
..........................................................

28. எரியும் மெழுகுதிரியில் வெளிவரும் இரு சக்திகளையும் எழுதுக.
..........................................................

29. மெழுகுதிரி இயற்கை ஒளி முதலா? செயற்கை ஒளிமுதலா?
..........................................................

30. எரிதலுக்கு உதவும் வாயு எது? ..........................


★ **கீழ்வருவனவற்றால் பரப்பப்படும்/பரவும் பிரதான ஒரு நோயினை எழுதுக.**

31. நாய் .............................. 32. ஈக்கள் ..............................
33. எலி .............................. 34. நுளம்பு ..............................

★ **கீழ்வரும் விளையாட்டுக்களின் ஆங்கிலப் பெயரை தரப்பட்ட விடைகளில் இருந்து தெரிந்து எழுதுக.**


**Table tennis, Badminton, Cricket, Volleyball, Net ball**

35.



..........................................

36.




..........................................

37.



..........................................

38.



..........................................

39.



..........................................


★ **பின்வரும் கரை அலங்கார வடிவங்களின் பெயர்களை எழுதுக.**

40.



..........................

41.



..........................

42.



..........................

43.



..........................

★ **பத்திக் அலங்காரம் மூலம் கைக்குட்டை ஒன்றைக் கடதாசியில் உருவாக்கும் வேலைப்பாட்டின் ஒழுங்கு முறைகளை கீழே தரப்பட்டுள்ள அவற்றின் கீறிட்ட இடத்தில் வரவேண்டிய சொல்லைத் தெரிந்து எழுதுக.**

மெழுகுவர்த்தியால், கைக்குட்டையின், கடதாசியைப், அலங்காரம், நீர்வர்ணம், காய்ந்த.


44. தேவையான .............................. பெற்றுக் கொள்வர்.
45. மூலைக்குப் பொருத்தமான இலகுவான .............................. வரைவர்.
46. பென்சில் கோட்டின் மீது .............................. அழுத்தமாக வரைவர்.
47. கடதாசிக் கைக்குட்டை மீது .............................. பூசுவர்.
48. .............................. பின் மீண்டும் மெழுகுவர்த்தியால் அழுத்தமாக வரைந்து நீர்வர்ணம் பூசுவர்.
49. பத்திக் .............................. முடிவினை அழகுபடுத்துவர்.

★ **கீழ்வரும் வினாக்களில் உள்ள விடைகள் உரோமன் எண்ணில் தரப்பட்டுள்ளன. அவற்றில் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

50. இலங்கையிலுள்ள மாகாணங்கள் (X, VIII, IX, XXV)
51. சூரிய ஒளியில் உள்ள நிறங்கள் (VI, VII, VIII, XV)
52. ஒரு நாளில் உள்ள மணித்தியாலங்கள் (XVI, XII, XXIV, XXVI)

★ **உருவில் உள்ளவாறு உருளும் வண்டியொன்றைச் செய்வதற்குத் தேவையான பிரதான ஆறு பொருள்களும் எவை என்பதைத் தரப்பட்ட பொருள் கூட்டத்திலிருந்து தெரிவுசெய்து எழுதுக.**

ஆணி, நூற்கட்டை, காட்போட், கயிறு, கம்பித்துண்டு, போத்தல், தகரமூடி, மரக்கட்டை, தடி, வெற்றுப்பேணி.



53. (1) .............................. (4) ..............................
(2) .............................. (5) ..............................
(3) .............................. (6) ..............................

★ **பின்வருவனவற்றின் சரியான விடையினை எழுதுக.**

54. இலங்கையின் மிக நீளமான நதி எது?
..........................................................
55. இலங்கையின் மிக உயரமான நீர்வீழ்ச்சி எது?
..........................................................
56. இலங்கையின் தேசியப் பூ எது? ..............................
57. உலகில் மிகப் பெரிய கண்டம் எது? ..............................
58. உலகில் மிக நீளமான நதி எது? ..............................

★ **கீழ்வரும் பிரசினங்களைக் கவனமாக வாசித்து அதற்குரிய சரியான விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

59. பாத்தியொன்றில் 15 மிளகாய்க் கன்றுகள் நடப்பட்டுள்ளன. அவ்வாறான 14 பாத்திகளில் நடப்பட்டுள்ள மிளகாய்க் கன்றுகளின் எண்ணிக்கை யாது? ..............................

60. ஒரு லீற்றர் 250 மில்லிலீற்றர் குளிர்பானம் 5 பிள்ளைகளுக்குச் சமனாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது. அவர்களில் இருவர் பெறும் குளிர்பானத்தின் மொத்த அளவு யாது?
.................... மில்லிலீற்றர்


61. நர்த்தனா கடையிலே 1kg 500g மாவும், 450g சீனியும், 2kg கிழங்கும், 300g தேயிலையும் இவற்றோடு மிளகாயும் வாங்கினாள். அவள் வாங்கிய பொருள்களின் மொத்த நிறை 5kg ஆகும். அவள் வாங்கிய மிளகாயின் நிறை எவ்வளவு?
.................... கிராம்

62. பெரிய பெட்டியினுள் 80 மாபிள்களும், சிறிய பெட்டியினுள் 50 மாபிள்களும் உள்ளன. இரு பெட்டியிலும் இருக்கும் மாபிள்களின் எண்ணிக்கை சமமாகும் வண்ணம் பெரிய பெட்டியில் இருந்து எத்தனை மாபிள்களை சிறிய பெட்டியினுள் போடவேண்டும்?
..........................................................

63. நவீனன் ஒரு பக்க நீளம் 50cm உடைய சதுர வடிவத் துணியை 50cm நீளமும் 25cm அகலமும் கொண்ட இரு துண்டுகளாக வெட்டினான். ஒரு துண்டின் வடிவத்திற்குக் கொடுக்கக்கூடிய பெயர் யாது? ..............................

★ **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

64.




இப்பரிசோதனை எதனை அறியச் செய்யப்பட்டது?
(1) நீரின் விரிவடைவதை அறிய.
(2) வாயுக்களின் விரிவடைவதை அறிய.
(3) போத்தல் விரிவடைவதை அறிய.

65. உலோகக் கரண்டிக்கு மரக்கைபிடி போடுவதன் காரணம்.
(1) கரண்டியை அழகுபடுத்துவதற்கு.
(2) கரண்டி உடையாமல் இருப்பதற்கு.
(3) வெப்பம் கைக்குக் கடத்தாமல் இருக்க.

66. △+ △+ □= 12 ஆகும். □இதன் பெறுமானம் 6 எனின் △இதன் பெறுமானம் யாது?
(1) 3 (2) 4 (3) 6 (4) 10

67.



இது எவ்வகைக் கோணம்?
(1) செங்கோணம்
(2) செங்கோணத்திலும் கூட
(3) செங்கோணத்திலும் குறைய

★ **கீழ்வரும் கால் விரல்களுக்குரிய பறவைகளின் பெயரை எழுதுக.**

68. 69. 70.



.................... .................... ....................

★ **நான் மாலைநேரத்தில் கடற்கரையில் நின்று பார்த்த காட்சிகள்....... என்னும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய், பயனிலைகளுடன் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.**

71. ..........................................................
72. ..........................................................
73. ..........................................................
74. ..........................................................
75. ..........................................................
76. ..........................................................

தயாரிப்பு:
**திரு. வே. அன்பழகன் (ஆசிரியர்)**

# பிற்போடப்பட்டுள்ளது


பண்டத்தரிப்பு அம்மன் வீதி ஞானவைரவர் ஆலய வளர்ச்சிக்காக அதிர்ஷ்டம் பார்க்கவிருந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டிருக்கின்றதென்பதை அறியத்தருகின்றோம்.

ஆலய வளர்ச்சிக்காக குறைந்த கட்டணம் ரூபா 20/= ஐச் செலுத்தி அதிர்ஷ்டலாபச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளும் வண்ணம் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம். (6153)

- ஆலயத் தொண்டர்கள்.

# ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு
05
-
04
-
1931



உதிர்வு
31
-
07
-
2001

## அமரர் மருதர் தம்பிராஜா

ஓராண்டென்ன ஒரு நூற்றாண்டே சென்றாலும்
உங்கள் நினைவுகள்
எங்கள் உள்ளத்தை விட்டகலாது ஐயா!

*உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:*

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*கரவெட்டி மத்தி,*
*கரவெட்டி.* (6137)

## கூட்டுறவு சங்கங்களுக்கு கணனிகள்

அரியாலை,ஜுலை19

யாழ்.குடாநாட்டில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தேவைகளுக்கென மேலும் பத்து கணனி இயந்திரங்கள் இந்த மாத இறுதிக்குள் கூட்டுறவு .அமைச்சினால் அனுப்பி வைக்கப்படும் என்று திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஏற்கனவே கடந்த வாரம் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருந்த கூட்டுறவுத்துறை அமைச்சர் ஏ.ஆர். எம்.காதர் ஐந்து கணனி இயந்திரங்களை தன்னுடன் எடுத்துவந்து வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியரின்றி மாணவர் அவதி!

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் ஆங்கில ஆசிரியர் இல்லாததால் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகப் பெற்றோர் தெரிவித்தனர்.

புலமைப் பரிசில் பரீட்சையில் ஆங்கிலம் தொடர்பான கேள்விகளும கேட்கப்படுவதால் மாணவர்களின் நலன் கருதி உடனடியாக ஆங்கில ஆசிரியர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு பாடசாலை அதிபரைப் பெற்றோர்கள் கேட்டுள்ளனர். (ஒ-117)

## தவறிவிட்டது

சங்கானைக்கும் சுழிபுரத்துக்கும் இடையில் வைத்திலிங்கம் சுதர்சினி என்பவரின் பூப்புனித நீராட்டுவிழா வீடியோ கசற் தவறிவிட்டது.

இதைக் கண்டெடுத்தவர்கள் சிவாஸ் ஸ்ரூடியோ, சித்தன்கேணி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (6146)

# வீடியோ படக்காட்சி

யாழ்ப்பாணம்,ஜுலை19

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும், திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப் படக் காட்சித் தொடரில் சந்தோஷ் சிவன் (SANTOSH SIVAN) இயக்கிய 'அசோகா' (ASOKA) எனும் திரைப்படம் நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு புவியியற் றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. ஆர்வலர்கள் எவரும் கலந்து கொண்டு பயன்பெறலாம் என புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (எ)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### பேராசிரியர் சிவபாதசுந்தரம் மகேஸ்வரன் நினைவுப் பேருரை

இன்று (19.07.2002) பி.ப 3.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவிருநத மேற்படி நினைவுப் பேருரை தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது எனபதனை இத்தால் அறியத்தருகின்றேன். புதிய திகதி பின்னர் அறியத்தரப்படும்.

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
*துணைவேந்தர்.*

(C/22989)

## மரண அறிவித்தல்

### இரகுநாதர் செல்லத்துரை

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இரகுநாதர் செல்லத்துரை நேற்று (18.07.2002) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரகுநாதர் - சின்னம்மா தம்பதியினரின் கனிஸ்ட புத்திரரும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், தமிழரசி, தமிழ்ச்செல்வி ஆகியோரின் அன்புத் தந்தையும், இளங்கோவன் (நெதர்லாந்து), ஜெயக்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், நிருபிகா, சுதர்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.07.02) வெள்ளிக்கிழமை நண்பகல 12.00 மணியளவில்அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, மக்கள்.

*நாவலடி,*
*கோப்பாய்.* (6151)

786

# R.B.BOOKING CENTER

# ஆர்.பி.(B) பஸ் ஆசனப் பதிவகம்

யாழ்., கொழும்பு, மட்டக்களப்பு, திருமலை, கண்டி பஸ் சேவைகள்

(அரச அங்கீகாரம் பெற்ற ஸ்தாபனம்)

## மாபெரும் சுற்றுலா!...

இலங்கையில் எழில் கொஞ்சும் இடங்களைப் பார்ப்பதோடு, கதிர்காமக் கந்தனின் தீர்த்தோற்சவம், ஆடிவேல்விழா ஆகியவற்றிற்கு செல்வதற்கு புறப்படுங்கள்!

22.07.2002 திங்கள் காலை 6மணிக்கு யாழ்.நகரில் எமது ஸ்தாபனத்திலிருந்து!

**கட்டணம் (பெரிய சொகுசு பஸ்) 3000/= மட்டுமே!**

சொற்ப ஆசனாங்கள் மட்டும் உள்ளதால் முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்!




## பிரதானமாக பார்வையிடும் இடங்கள்:

வெந்நீர்க்கிணறு, கோணேஸ்வரர் ஆலயம் (திருகோணமலை), மாத்தளை முத்துமாரி அம்மன் ஆலயம், சிகிரியா, தலதாமாளிகை (கண்டி), தேசிய பூங்கா (பேராதனை), ஆஞ்சநேயர் ஆலயம் (ரம்பொடை), சீதா கோயில் (நுவரெலியா), தேசிய பூங்கா (கக்கல), இராவணன் நீர்வீழ்ச்சி, கதிர்காமம், முன்னேஸ்வரம், பொன்னம்பலவாணேஸ்வரம், தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை, ரூவன்வெலிசாய, ஆயிரம்கால் மண்டபம், அரசமரம் (அநுராதபுரம்) ஆகிய இடங்கள் பிரதானமாக பார்வையிடப்படும்.

தென்மராட்சியில் எமது கிளை ஆசனப் பதிவகமான எஸ்.எஸ். பஸ் ஆசனப்பதிவகம் ஊடாக பின்வரும் இடங்களில் பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

கணேசா ஹாட்வெயர்
(பழைய பிரதேச செயலகம் முன்பாக)
சாவகச்சேரி.

ஸ்ரீ கண்ணகி பல்பொருள் வாணிபம்
(மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் அருகில்)
புத்தூர்ச்சந்தி.

சாயிராம் பார்மசி
கண்டிவீதி, சாவகச்சேரி,
சங்கத்தானை.

கோகிலா தேநீர்ச்சாலை
(பஸ்நிலையம் முன்பாக்),
கொடிகாமம்.

துர்க்கை அம்பாள் புத்தகசாலை
(ஐயா கடையடி, கண்டி வீதி, ஆசீர்வாதம் புத்தகசாலை)
மீசாலை.

ஜெயம் கடை
பழமுதிர்ச்சோலை, கண்டி வீதி,
மீசாலை.

விக்கினேஸ்வரா களஞ்சியம்,
கண்டி வீதி, புத்தூர்ச்சந்தி,
மீசாலை.

ஸ்ரீ மெடிக்ஸ்
கண்டி வீதி, மீசாலை.
T.P.NO: 070 - 212753

மேலதிக தொடர்புகளுக்கு:
எஸ்.செவ்வேள் or பாலாமாஸ்ரர்
T.P.NO: 070 - 212792

கண்ணகி பல்பொருள் வாணிபம்
கண்டி வீதி, புத்தூர்ச் சந்தி, மீசாலை.

யாழ்.நகரில்:-

ஸ்ரீ ஸ்ரோர்ஸ்
சுதுமலைச் சந்தி,
மானிப்பாய் றோட், மானிப்பாய்.

யோகாஸ் புடைவையகம்
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீ முருகன்
தொலைத் தொடர்பு நிலையம்,
கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்.

ஆர்.பி.(B) பஸ் ஆசனப் பதிவகம்
நவீன சந்தை,
வைரவர் கோவில் அருகில்,
யாழ்ப்பாணம்.
15, Grand Bazaar,
Jaffna. (C-22990)


# 'பொன் அணிகளின் போர்' இன்று தொடங்குகிறது

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி கிரிக்கட் அணிக்கும் சென். பற்றிக்ஸ் கல்லூரி கிரிக்கட் அணிக் கும் இடையிலான ஷபொன் அணிகளின் போர் (Battle of the Gold) இன்றும் நாளையும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற இருக்கிறது.

பொன் அணிகளின் போரில் 85 ஆவது வருடாந்த ஆட்டம் இதுவாகும். சென்பற்றிக்ஸ் அதிபர் வண.பிதா எம்.ஜெறோ செல்வநாயகம், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் வண.பிதா.ஏ.ஏ.போல் ஆகியோர் "பொன் அணிகளின்" போருக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இன்றும் நாளையும் காலை 10 மணிமுதல் மாலை 5.30 மணிவரை ஆட்டங்கள் நடைபெறும். இதுவரை இரு கல்லூரிகளுக்குமிடையேயான 84 கிரிக்கட் ஆட்டங்களில் 25 ஆட்டங்களில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் 15 ஆட்டங்களில் யாழ்ப்பாணக் கல்லூரியும் வென்றுள்ளன. 25 ஆட்டங்கள் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்துள்ளன. 19 ஆட்டங்களின் முடிவுகள் பற்றிய விவரங்கள் கிடைக்க வில்லை. நாளை முடிவடையும் பொன் அணிகளின் போரின் இறுதியில் ஒவ்வொரு துறைகளிலும் சிறந்து விளங்கிய வீரர்களும், ஆட்ட நாயகனும் தெரிவுசெய்யப்படுவர்.

இவர்களில் சகல துறைகளிலும் சிறந்து விளங்குபவருக்கு 'உதயன்' பத்திரிகை சார்பில் சைக்கிள் பரிசளிக்கப்படவுள்ளது. அத்துடன் கோக்கோகோலா, மக்கள் வங்கியில் பணியாற்றும் சென். பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் குழு, நியூலங்கா றேடர்ஸ், அன்டோ எலக்ரிக்கல்ஸ் ஆகியவை சார்பிலும் பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.




**சென்.பற்றிக்ஸ் அணியினர்**

இருப்பவர் (இ-வ):- எஸ்.சகாயராஜா (விளையாட்டுப்பொறுப்பாசிரியரும், பயிற்றுநரும்), ஏ.ஆர்.சேர்ச்சில் (அணித் தலைவர்), வண.பிதா.எம்.ஜெறோ செல்வநாயகம் (அதிபர்), சி.நிசாந்தன் (அணி உபதலைவர்), பி.ஜெயக்குமார் (கிரிக்கட் பொறுப்பாசிரியர்).

நிற்பவர் மத்திய வரிசை (இ-வ):- எஸ்.வின்சன், எஸ்.அருண்நாத், வி. செல்வின் லோஜித், பீ.பிரசாந்தன், எஸ்.டினேஷ், எஸ்.போல்ரன் ஹெஸ்ரன், ஐ.கோணேஸ் ரோஜேஸ், ஆர்.வினோதன்.

நிற்பவர் பின்வரிசை (இ-வ):- ஏ.எல். சுஜீவன், டி.ஏ.ஜோசேப், சி.ஆர்.எம்.கிருஷாந்தன், ரீ.றொஷான் டேமி, ஆர். நிசாந்தன், எம்.பிரபாகரன்.



**யாழ்ப்பாணக் கல்லூரி அணியினர்**

இருப்பவர் (இ-வ):- பீ.எல்.மோகனகுமார் (பயிற்றுநர்), என்.எஸ்.செந்தூரன், வண.பிதா.ஏ.ஏ.போல (அதிபர்), ஆர்.டினேஸ்குமார் (அணித் தலைவர்), எஸ்.எம்.திலீபன், எம்.தற்பரானந்தன் (விளையாட்டுப் பணிப்பாளர்).

நிற்பவர் (இ-வ): எஸ்.சி.தர்சிந்தன், எம்.அகிலநாதன், எஸ்.ஜே.நிரோஷன், வை.துஜன், கே.சுகாஷ், யூ.பாலமுருகன், வி.நிருபரன், ஜீ.கோகுலரமணன், எஸ்.ராஜ்குமார், எம்.ரமணன், எஸ்.தனாரன்.

படத்தில் இல்லாதவர்கள்:- எஸ். ஜே.நிம்றோ, வை.ஜெயச்சந்திரன்.

# மகளிர் முன்னேற்ற அலுவலர்க்கான நேர்முகப் பரீட்சைக்கு தெரிவானோர்

யாழ்ப்பாணம்,ஜூலை19

மகளிர் விவகார அமைச்சின் மகளிர் முன்னேற்றப் பெண் உத்தியோகத்தர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்ட 262 பட்டதாரிகளில் 131 பேரின் பெயர் விவரங்கள் நேற்றைய உதயனில் வெளியாகின.

மிகுதி 131 பேரின் பெயர் விவரங்கள் வருமாறு:-

நடராஜா கௌரீஸ்வரி(இணுவில்), நகுலேஸ்வரி முருகர்(இயற்றாலை), அனிதா இராமலிங்கம்(இணுவில்), சுபாந்தினி நவரட்ணம்(திருநெல்வேலி), சங்கர் ஜானகி(அரியாலை), கந்தசாமி ஆனந்தபவானி(தாழையடி), சசிகலா கிருஷ்ணராசா(கைதடி), கறுப்பையா யோகேஸ்வரி(அளவெட்டி), யசோதரா சின்னையா(மீசாலை), ஏரம்பு குகானந்தி(நவாலி), வெலிச்சோர் அருமைநாயகம் ஆன்லுமினா வசந்தகுமாரி(பண்டத்தரிப்பு), ரூபா உதயரட்ணம்(யாழ்ப்பாணம்), மனோபவானி சுப்பிரமணியம்(இயற்றாலை), வாசுகி இராமநாதன்(மானிப்பாய்), உதயகுமாரி வேலுப்பிள்ளை(கொடிகாமம்), வெனிசுயா ஆசீர்வாதம்(மட்டக்களப்பு), அழகுராணி சிவானந்தம்(சுதுமலை), புனிதநிக்கி சிவகுமார்(கொடிகாமம்), தாமரைச்செல்வி நாகையா(தாவடி), சுதர்சினி பாலசுப்பிரமணியம்(கொக்குவில்),

ஸ்ரீதா பிறைசூடி(கரவெட்டி), செல்வராணி செல்லத்துரை(புன்னாலைக்கட்டுவன்), பிறேமினி சபாரட்ணம்(சங்கத்தானை), சுஜி நல்லராஜா (நெல்லியடி), சுதாரஜினி பிரபாகரன் (அளவெட்டி), வாசுகி வாமதேவன் (பருத்தித்துறை), தனரூபி கிருஷ்ணபிள்ளை(நுணாவில்), மாலினி சிவலிங்கம்(வல்லிபுரம்), செல்வமதி ராமச்சந்திரன்(துன்னாலை), ரதீஸ்வரி பிள்ளைநாதன்(இமையாணன்), நாராயணி கதிர்காமநாதன்(கைதடி), சுதர்சினி வைரமுத்து(நல்லூர்), மஞ்சுளா சின்னப்பா(புன்னாலைக்கட்டுவன்), உமா பாலசிங்கம்(உடுப்பிட்டி), முருகையா கேதீஸ்வரன்(ஊரெழு), முருகையா சுகந்தினி(ஊரெழு), கிஷாந்தி சரவணபவன்(கொக்குவில்), வனஜா கந்தசாமி(உடுப்பிட்டி),

திருஞானசம்பந்தர் கணேஸ்வரி (கந்தர்மடம்), யசோதரூபி நடேசு (சங்கானை), கனிமொழி கதிரவேற்பிள்ளை(புலோலி), மாலதி முருகுப்பிள்ளை(பலாலி), கலைச்செல்வி ஞானசேகரம்(இயற்றாலை), வளர்மதி ஞானசேகரம்(இயற்றாலை), சின்னத்துரை மனோகரி(மட்டுவில்), கோமதி நடராஜா(நவாலி), சுகந்தினி ராஜரட்ணம்(உரும்பிராய்), பாலசுப்பிரமணியசிவம் சிவச்செல்வி(வட்டுக்கோட்டை), கலாவதி ரட்ணவேல்(வண்ணார்பண்ணை), மீனலோஜினி அருணாசலம்(சாவகச்சேரி), ரஜிதா கனகரட்ணம்(நெல்லியடி), பாக்கியவதனி வல்லி(வரணி), விஜிதா குலசிங்கம் (அளவெட்டி), வெண்மதி சண்முகலிங்கம், தனலஷ்மி கருப்பையா (நுவரெலியா), கனகசூரியம் மேகலா (மட்டக்களப்பு), புஸ்பலதா நடராஜா (பலாலி), துரைராஜா விகிர்தா(நுணாவில்), தனுஜா பாலச்சந்திரன்(உடுப்பிட்டி), கிருபானந்தி கந்தசாமி(நவாலி), தவச்செல்வம் முகுந்தன்(புளியங்கூடல்), கவிதா கணேசரட்ணம்(மாதகல்), உமா பாலசிங்கம்(மாதகல்), மாலதி அப்புத்துரை (மாகியப்பிட்டி), கார்த்திகா ஸ்ரீதரன்(யாழ்ப்பாணம்), கல்பனா சோதிலிங்கம்(நீர்வேலி), நாகவதனா சச்சிதானந்தன்(காரைநகர்), தர்சினி கனகரட்ணம்(தெல்லிப்பழை), தபோதினிதேவி திருநந்தம் (கந்தர்மடம்), விஜயகௌரி சிவப்பிரகாசம், நர்மதா பதாஞ்சலி(உடுவில்), சகீலா நித்தியானந்தன்(யாழ்ப்பாணம்),

பொன்முடி ராகவன்(யாழ்ப்பாணம்), சுதர்சினி துரையப்பா(யாழ்ப்பாணம்), அப்புத்துரை செல்வரஜனி (மல்லாகம்), மகாராஜீ மகாதேவா (நல்லூர்), சுபாஜினி அருள்குமரன் (வண்ணார்பண்ணை), பரமசிவம் ஸ்ரீரஞ்சனி(கோண்டாவில்), கே.சதீஸ்வரன்(யாழ்ப்பாணம்), செல்வரத்தினம் சந்திரா(இணுவில்), வயலற் நீக்கிலாஸ்(யாழ்ப்பாணம்), ஜி.செந்தில்மதி(கொக்குவில்), உமாதேவி தியாகராஜா(மல்லாகம்), சசிகலா சந்திரசேகரம்(ஏழாலை), கௌரி இராஜதுரை(சுன்னாகம்), நிஜாந்தினி நமசிவாயம்(அல்வாய்) வசந்தகுமாரி இராமச்சந்திரன்(புலோலி), வதனி சிவஞானசுந்தரம்(பருத்தித்துறை),

தவரஞ்சினி கதிர்காமத்தம்பி(அல்வாய்), கவிதா நடராஜா(இணுவில்), ஜெயசுதா கணபதிப்பிள்ளை(சரசாலை) நடராசா திருச்செல்வி(வரணி), ரேவதி பத்மநாதன்(மானிப்பாய்), செவின் சஜி மெலோனி(உடுவில்), ரஞ்சனா கோபாலகிருஸ்ணர்(மந்திகை), சுமதி மகாதேவன்(சங்கத்தானை), உசாந்தினி நடராசா(அரியாலை), வனிதா ஆனந்தலிங்கம்(தும்பளை), சுதர்சினி கதிர்காமநாதன் (கரவெட்டி), பத்மஜோதி பரம்ஜோதி (யாழ்ப்பாணம்), சுபாஜினி முத்தையா (வண்ணார்பண்ணை),

சிவரஞ்சினி நடராஜா(கரணவாய்), சிவாஜினி இராஜதுரை(துன்னாலை), நிஷாந்தினி பாலசுந்தரம்(கரணவாய்), மதுமதி ரட்ணவடிவேல்(பருத்தித்துறை), காந்தரூபி சீவரட்ணம் (கரவெட்டி), சின்னத்தம்பி மதீஸ்வரன் (கோண்டாவில்), வென்சஸ்லாஸ் புதசதீஸ்குமார்(குருநகர்), வெள்ளைத்தம்பி அமீல்டான்(யாழ்ப்பாணம்), ரஜிதா தனேஸ்குமார்(கோப்பாய்), நடராஜா கோசலாதேவி(யாழ்ப்பாணம்), குமுதினி குணசேகரம்(கைதடி நுணாவில்), ஈஸ்வரி வேலாயுதபிள்ளை(தாவடி), நியந்தினி நமசிவாயம்(அல்வாய்), சிவசக்தி இராசையா(யாழ்ப்பாணம்), ஜெயந்தி கமலேஸ்வரன்(கொக்குவில்), அனுபாமா நாகராஜா(சுதுமலை), கௌசிதா சண்முகநாதன்(விளிசிட்டி) -

சாந்தகுமாரி தங்கராஜா(பருத்தித்துறை), முருகர் இராசலிங்கம்(இயற்றாலை), ராதிகா பாலசிங்கம்(நல்லூர்), அகல்யா கார்த்திகேசு(மிருசுவில்), பரமநாதன் மலர்விழி(ஆனைக்கோட்டை), சசிகலா ரட்ணம்(தெல்லிப்பழை), கோபாலசிங்கம் பத்மினி (நாரந்தனை), இராசநாயகம் சுகிதா (யாழ்ப்பாணம்), சுதர்மினி குமாரசாமி (நல்லூர்), சயந்தினி அருணாசலம் (மல்லாகம்), யோகானந்தராஜா தங்கமலர்(நல்லூர்), நந்தினி சங்கரப்பிள்ளை(அராலி), கீதாஞ்சலி தர்மலிங்கம்(உடுவில்). (ஓ-10)

## காரைநகர், அளவெட்டிக்கு
# மின் இணைப்பு வழங்க 10 லட்சம் நிதி ஒதுக்கீடு

குடாநாட்டில் மின்வசதி வழங்கப்படாத அளவெட்டி, காரை நகர்பகுதிகளுக்கு மின்விநியோகப் பணிகளை மேற்கொள்வதற்கென பத்து லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மின்சக்தி வலு அமைச்சர் கரு ஜெயசூரியா இந்த நிதி ஒதுக்கீட்டை மின்சார சபைக்கு வழங்கியுள்ளார்.

முதல் கட்டமாக இந்த உதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் -

வேலைகளின் முன்னேற்றத்தைப பொறுத்து மேலும் உதவிகள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. மின்வசதி வழங்கப்படாத ஏனைய பகுதிகளுக்கும் படிப்படியாக மின் விநியோகம் வழங்குவதற்குத் தேவையான நிதியை வழங்க முடிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-3)

# வைதாரையும் வாழவைப்பவன் இறைவன்

## ஞானக்கதிர்

துன்பங்களைச் சுமந்து அலையும் நெஞ்சோடு திசைமாறித் தவிக்கும் மனுக்குலம் நிம்மதி அடைந்து நிலைபெற்றுச் சுகமுடன் வாழத் துணைநிற்கும் இந்துமதம் தர்மத்துக்கும் வழிசொல்கிறது. அமைதியை நாடி தினமும் ஏங்கும் மனித உள்ளங்களுக்கு இறைசிந்தனையும் ஆன்மீக வழிபாடும்தான் சிறந்த மருந்தா கும். தெய்வத்தைத் தியானித்து, தெய்வத் திருநாமத்தை உச்சரித்து, பிறர்க்கு இடர்செய்யாது, அன்பை வளர்த்து, அறத்தின்பால் ஒழுகுவதும் மேனமைதகு நெறியாகும். இப்பூதலத்துக்கு மாசுகளாக பொய்களும், பூசல்களும், ஆசைகளும், கபடமும் மலிந்துள்ளபோதிலும் மிகவுயர்ந்த கடவுளின் கடாட்சம், கருணை, அருட்பார்வை எங்கணும் நிறைந்தே உள்ளன.

அத்துடன், எல்லா உயிரினங்களிலும் இறைவன் உறைகின்றான். 'அப்பன் நீ, அம்மை நீ, அன்புடை மாமனும் மாமியும் நீ, ஒப்புடைய மாதரும் நீ என்ற நாவுக்கரசரின் நயவுரையும் 'அம்மையே அப்பா ஒப்பிலா மணியே அன்பினில் விளைந்த ஆரமுதே' என்ற வாதவூரர் வாசகமும் 'எங்கும் எவையும் எரியுறு நீர்போல நிறைந்திருந்தும் ஆக்கி எவையும் அளித்தாசுடன் அடங்க போக்கும் அவன் போகாப் புகல்' ஆக விளங்கியும் திருவருள் புரிகிறான். உயர்விலும் பணிந்து பசித்தோர் முகம் பார்த்து, பரிதவிப்போர்க்கு இரங்கித் தூய சிந்தையுடன் ஒழுகி வாழ்தல் நல்லறமாகும்.எல்லா அறங்களையும் உபதேசிக்கும் இந்துமதம் உண்மையின் ஒளிதுலங்க மனவுறுதி, அஞ்சாமை என்ற நல்லியல்புகளோடு கூடிய அன்புநெறியையும் காட்டி குழாமாகக் கூடுவோரும் என்புருகக் கும்பிடுவோரும் உலக நலத்துக்காகவே என்றும் போதிக்கின்றது. தன்னுயிர் போல பிறவுயிரை ஒப்புதலும் பெருமைக்குரியதென எங்கள் மதம் சொலகின்றது. 'எவ்வுயிரும் என்னுயிர் போலெண்ணி இரங்கவும் நின்தெயவ அருட்கருணை செய்யாய் பராபரமே' என்று அன்பர்க்கு பணிசெய்து வாழ்வதின் உயர்வைத் தாயுமானவர் உணர்த்தி நிற்கின்றார். அன்பர் பணி செய்வதும் ஆனந்தமே என்றும், யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்றும், தொண்டு செய்து வாழ்வதின சிறப்பைக் காட்டி நிற்பதும் இந்துமதமே. இறைமீதும், பிறர்மீதும் காட்டும் அன்பானது முத்தியின் பத்தையும் ஈட்டித் தரவல்லது. ★

கந்த தியாகராசா

# யாழ்.மாவட்டத்தில் 'நியாப்' திட்டங்கள்

உலக வங்கியின் உதவியுடன் வடக்கு - கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின்கீழ்(நியாப்) 2002 ஆம் ஆண்டில் யாழ்.மாவட்டத்தில் பத்து வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ள நீர்ப்பாசனக் குளங்கள் மற்றும உவர்நீர்த் தடுப்பணைகளின் விவரம் வருமாறு:-

பொன்னாலை பெரியகுளம், வேலணைப் பெரியகுளம், வேடுவன் கண்டி குளம்(நவாலி), தம்பலைக்குளம் (இடைக்குறிச்சி), நெடுங்கிராய்க்குளம் (கப்பூது), கவடுவிராய்க்குளம் (வல்லிபுரம்), செம்மணிக்குளம்(இருபாலை), சாம்பலோடை உவர்நீர்த் தடுப்பணை (காரைநகர்), சரவணை உவர்நீர்த் தடுப்பணை, குறுக்குக்கடல் மெலிஞ்சிமுனை உவர்நீர்த் தடுப்பணை (கரம்பன்).

இந்த வேலைத் திட்டங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும்-

அடுத்த ஆண்டுக்கான வேலைத் திட்டங்களின் முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் - 'நியாப்' திட்ட உத்தியோகத்தர் தெரிவித்தார். (ஓ-10)

# வலைப்பந்தாட்ட இறுதிப்போட்டி

இலங்கை வங்கி மற்றும் ரூபி ஜ்வல்லர்ஸ் அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடத்தப்படும் யாழ். மாவட்ட ரீதியிலான வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின இறுதிப்போட்டி.

பிரதம விருந்தினர்: பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

*மோதவுள்ள அணிகள்:* யூனியன் அணி Vs
யாழ். பல்கலைக்கழக அணி

*இடம்:* பல்கலைக்கழக விளையாட்டு மைதானம்
*காலம்:* இன்று (19.07.2002) வெள்ளி பி.ப.4.30 மணி

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

வலைப்பந்தாட்ட அணி, விளையாட்டு அவை,
யாழ்.பல்கலைக்கழகம்.

(6139)



# ரஷ்யாவில் மருத்துவக் கல்வி

சர்வதேச அங்கீகாரம் பெற்ற லுமும்பா போன்ற ரஷ்யப் பல்கலைக்கழகங்களில் மருத்துவக் கல்வி பெற அனுமதி பெற்றுத்தரப்படும்.

| *ஊடகம்* | *காலம்* | *செலவு* |
|---|---|---|
| ஆங்கிலம் | 6 வருடம் | 4000 டொலர் வருடம் |
| ரஷ்யமொழி | 7 வருடம் | 2000 டொலர் வருடம் |

*உடன் சந்திக்கவும்:*

Dr.க.சிவனடியான்.

காலை:
மூத்தவிநாயகர் கோயிலடி,
ஆனைக்கோட்டை.

மாலை:
யாழ்.வீதி,
மானிப்பாய்.

(6074)



# CATWAS.COM COMPUTER ACADEMY

நோர்வே தமிழ் கத்தோலிக்க நலன்புரிச் சங்க (CATWAS) ஆதரவில் அமலமரித்தியாகிகள் நடத்தும் கணனிப் பயிற்சிக் கல்வித்திட்டம் ஆரம்பமாகிறது. IBS (INTERNATIONAL BISNESS SYSTEM OVERSEAS (PVT) LTD.) நிறுவன அனுசரணையுடன் சான்றிதழ் வழங்கப்படும். இடம்பெயர்ந்த வறிய மாணவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

விண்ணப்பப் படிவத்தினை பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

முடிவு திகதி: 30.07.2002.

*மேலதிக தொடர்புகளுக்கு:*

இயக்குநர்,
அருள்திரு.
சு.ஸ்ரனிஸ்லோஸ்அ.ம.தி.,
"மரிய அகம்",
48, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.


657/1, தொடர்பகம்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(6127)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
26 - 05 - 1928



உதிர்வு
19 - 06 - 2002

## அமரர் இராசையா கோபாலசிங்கம் (குணம்)

(வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும்,
யாழ்.பிறவுண் வீதியை வதிவிடமாகவும் கொண்டவர்)

*அன்புத் தந்தையே! எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே!*
*எம்மைப் பண்போடும் பாசத்தோடும் வளர்த்தெடுத்த*
*அன்புத் தெய்வமே!*

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

19.06.2002இல் சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு சகல வழிகளிலும் உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அத்தோடு தொலைபேசி மூலமாகத் தொடர்புகொண்டு தமது அனுதாபங்களைத் தெரிவித்து எமது துக்க துயரங்களில் பங்கேற்ற அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (19.07.2002) வெள்ளிக்கிழமை நிகழும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*"சிவா மில்",*
*46/1, பிறவுண் வீதி,*
*4ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.*

(6144)

பிரிவால்வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.


## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜுலை19

யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் பொது அமைப்புக்கள் மற்றும் தொழிற்சங்கங்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ்.கோயில் வீதியில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல அமைப்புக்களினதும் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோரைத் தவறாது கலந்துகொள்ளுமாறு ஒன்றியத்தின் தலைவர் கேட்டுள்ளார். (ஒ-10)

## சமூக சேவை அமைச்சின் உதவித் திட்டம்

சமூக சேவை அமைச்சின் இடம்பெயர் சேவையின்போது தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 11பேருக்கு சக்கர நாற்காலிகளும், கணவனை இழந்த 3பெண்களுக்கு தையல் இயந்திரங்களும வழங்கப்பட்டுள்ளன.

சுயதொழில் முயற்சிக்கான உதவி வழங்குவதற்கு 13 பேரின் பெயர்கள் சிபார்சு செய்யப்பட்டுள்ளதாகவும் -

ஊனமுற்றோருக்கான வீட்டு உதவித் திட்டத்திற்கு மூன்று பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் -

பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவுக்கு வந்துள்ள வெள்ளைப் பிரம்புகளை தேவையானோர் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர் ச.ஞானவேல் தெரிவித்தார். (ஒ-117)

## வீதி விபத்தில் மாணவி காயம்!

யாழ்ப்பாணம்,ஜுலை19

யாழ்ப்பாணம், மடத்தடி, கண்டிவீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஓட்டோ சைக்கிள் விபத்தில் சிறுமி ஒருவர் படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மட பாடசாலையின் 5ஆம் ஆண்டு மாணவியும் சைக்கிளை ஓட்டிச் சென்றவருமான அரியாலை மாம்பழம் சந்தியைச் சேர்ந்த ஸ்ரீதரன் விதுஷா (வயது 10) என்பவரே, பாடசாலைக்குச் சென்றபோது விபத்துக்குள்ளாகிப் படுகாயமடைந்தவராவார். (ஒ-15)

## சங்கீத சபை கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜுலை19

வட இலங்கை சங்கீத சபை நடத்தும் வதிவிடக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை முதல் எதிர்வரும் 23ஆம் திகதிவரை இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வட இலங்கைச் சங்கீத சபைத் தலைவர் திருமதி செ.மகாலிங்கத்தினால் ஆரம்பித்து வைக்கப்படும் இக்கருத்தரங்கில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் கலந்துகொண்டு விரிவுரையாற்றவுள்ளனர். (ஒ-9)

## வீட்டு நிலையை திருடியோர் பிடிபட்டனர்

கொழும்புத்துறை,ஜுலை19

கொழும்புத்துறை துண்டிச் சந்திப் பகுதியில் ஆள்களற்ற வீடொன்றினுள் புகுந்து அவ்வீட்டின் நிலையை உடைத்தெடுத்துச் செல்ல முற்பட்ட திருட்டுக் கோஷ்டி ஒன்று அப்பகுதி இராணுவத்திடம் பிடிபட்டது. இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

அவர்கள் திருடிய நிலைகளைத் தோளில் சுமத்தி 'நாங்கள் நிலை திருடிய கள்வர்' என கத்தியபடி வீதிகளில் செல்லுமாறு இராணுவத்தினர் தண்டனை வழங்கியதாகவும் கூறப்படுகிறது.

இவ்வகையான திருட்டுக்கள் நாளாந்தம் நடைபெற்று வருவதால் இடம்பெயர்ந்த மக்கள் சொத்துக்கள் உடைமைகளை இழந்து வருவதாகக் கவலை தெரிவிக்கின்றனர். (ஒ-ரி)

## இளைஞர் ஒருவர் வெட்டிக் கொலை

கொழும்பு,ஜுலை19

மருதானையில் இளைஞர் ஒருவர் இனம் தெரியாத குழுவொன்றினால் வெட்டிக்கொல்லப்பட்டார்.

மருதானை டீன்ஸ் வீதியில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் நான்கு பேரைக்கொண்ட குழுவொன்றினால் வசந்த என்னும் 28 வயது இளைஞர் வாள் வெட்டுக்கு இலக்காகி மரணமானார்.

கோஷ்டி மோதல் ஒன்றின் எதிரொலியாகவே இக்கொலை நடந்துள்ளதெனக் கூறப்படுகிறது. சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று கொழும்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.எல்.பீ.திசாநாயக்க தெரிவித்தார்.


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

## அறிவித்தல்

வெளிநிலைத் தேர்வு நாடிகளின் பதிவேடுகள்

1. *கலை முதற்தேர்வு கல்வியாண்டு – 2000/2001*
2. *வணிக முதற்தேர்வு கல்வியாண்டு – 2000/2001*
3. *கலைமாணி பகுதி – I கல்வியாண்டு – 2000/2001*
4. *நுண்கலைமாணி 1,2,3,4ஆம் வருடம் (சங்கீதம் / நாட்டியம்) 1999/2000*

மேற்படி கற்கைநெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வு நாடிகளாகப் பதிவுசெய்தவர்கள் தங்களுக்குரிய பதவேட்டினை இன்று (19.07.2002) வெள்ளிக்கிழமை முதல் வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

*குறிப்பு:* பிறப்புச் சான்றிதழினதும் கல்விச்சான்றிதழினதும் மூலப்பிரதிகளை இதுவரை சமர்ப்பிக்காதவர்கள் தயவுசெய்து கொண்டுவரவும.

16.07.2002. (C/22976) பதிவாளர்.



# FLASH VACANCY COMMUNITY FACILITATORS

## VACANCY

The Durable Solution Assessment Team as a part of UNHCR Project Implementation is looking for: Community Facilitators.

Candidates are expected to meet the following requirements:

- Secondary Education with at least 3 years experience in Social Services Activities.
- Ability in originating project proposals in the field of Human Rights with extended report writing skills.
- Field work experience.
- Good Computer skills.
- Languages: Fluency in: Tamil, English (spoken and written), knowledge of Sinhala language would be an asset.
- Good inter-personal skills, team work and flexibility.

*Applications and C.V. should be forwarded to the address below, on or before: 24th July 2002.*

UNHCR
*223, Temple Road, Jaffna.*

(6133)



# FLASH VACANCY MICRO PROJECT TEAM

## VACANCY

The Micro Project Team as a part of Project Implementation for Jaffna District is announcing the following vacancies in order to assist Government Implementing Partner:

1. Field Monitoring Officer
2. Field Finance Officer
3. Computer clerk

Candidates are expected to meet the following requirements:

- Secondary education with good experience in Community Activities.
- Fluency in English, both spoken and written.
- Good inter - personal skills, team work and flexibility.
- Experience in project documentation and computer skills.
- Field experience in assessment and monitoring projects (post 1 and 2).
- Excellent report writing skills (post 1 and 2).
- Ability to perform independent office management (post 1 and 2).
- Holding of Motorcycle driving licence (post 1 and 2).
- Good co-ordination abilities with other project partners (post 1,2,3).

Candidates should be aware that: **Over60% OF THE WORK TIME WILL BE SPENT IN THE FIELD.**

Applications and C.V. should be forwarded to the address bellow, on or before: 26th July 2002.

**UNHCR**
223, Temple Road, Jaffna.

(6132)

# முக்கிய சந்திப்புகள்

யாழ்ப்பாணம்,ஜுலை19

மானிப்பாய் வர்த்தக ஊழியர் சங்கக் கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் சோதிவேம்படி பாடசாலையில் நடைபெறவுள்ளது.

அனைத்து வர்த்தக ஊழியர்களையும் இதில் கலந்துகொள்ளுமாறு வலிகாமம் மேற்கு விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஓ-8)

★ ★ ★

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட அனைத்து உழவு இயந்திர உரிமையாளர்களுக்கான அவசர சந்திப்பு ஒன்று நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு நீர்வேலியில் அமைந்துள்ள அரசியல் துறையின் வலி.கிழக்கு கோட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

உழவு இயந்திர உரிமையாளர்களை அனைவரையும் இந்தக் கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு வலி.கிழக்கு அரசியல் துறையினர் கேட்டுள்ளனர். (எ)

## ஒன்றுகூடல்

தென்மராட்சி,ஜுலை19

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய உயர்தர வகுப்பு மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு நாளை சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

மேற்படி ஒன்றுகூடலில் முதன்மை விருந்தினராக யாழ். மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கமும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவும் கலந்துகொள்வர். (எ-117)


## மாபெரும் வீரர்களின் துடுப்பாட்டப் போர்
## Battle of the Heroes

ஸ்கந்தா V மகாஜனா
19.07.2002 ~ 20.07.2002

பிரதம விருந்தினர்
திருமிகு வீ.இராசையா
(கல்விப்பணிப்பாளர், வலிகாமம் வலயம்)

தலைவர்
திரு. க.சிவாஜி (ஸ்கந்தா அதிபர்)

போஷகர்
திரு.P.சுந்தரலிங்கம் (மகாஜனா அதிபர்)

துறைசார் விருந்தினர்
திரு.V.பாலசிங்கம் (உதவிக் கல்விப் பணிப்பாளர், உடற்கல்வி, வலிகாமம் வலயம்)

கௌரவ விருந்தினர்
திரு.K.நாகராசா
(முன்னாள் அதிபர், மகாஜனக் கல்லூரி)
திரு.N.சண்முகவேல் (ஸ்கந்தா பழைய மாணவரும் வர்த்தக சங்கத் தலைவரும்)

சிறப்பு விருந்தினர்கள்
திரு.V.தவராசா
(மகாஜன பழைய மாணவரும், நில அளவையாளரும்)
திரு.A.வடிவேல்
(கனடா - ஸ்கந்தா பழைய மாணவர் சங்கம்)
திரு.விஜயரட்ணம்
(ஆஸ்திரேலியா - ஸ்கந்தா பழைய மாணவர் சங்கம்)

ரசிகப்பெருமக்கள் அனைவரையும் வருக வருக என அன்புக்கரம் நீட்டி வரவேற்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி. யா/மகாஜனக் கல்லூரி.
(C/22993)



## மாபெரும் வீரர்களின் துடுப்பாட்டப் போர்
## BATTLE OF THE HEROES

ஸ்கந்தா V மகாஜனா

'உதயன்' பத்திரிகை நிறுவனத்தின் ஆதரவில்
சிறந்த வீரர்களுக்கான பரிசில்கள்...

- சிறந்த துடுப்பாட்ட வீரர்
- சிறந்த பந்து வீச்சாளர்
- சகலதுறை வீரர்
- ஆட்ட நாயகன்

ஆகியோருக்கான சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

- தொலைக்காட்சி (T.V.)
- மின் காற்றாடி
- எலக்ரிக்கல் உபகரணங்கள்

போன்ற பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

அதிபர்,
விளையாட்டுத் துறையினர்.
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை, சுன்னாகம். (C/22992)



## மாபெரும் சிரமதானப் பணி

பச்சிலைப்பள்ளியின் பிரசித்திபெற்ற ஆலயமான பளை இரட்டைக்கேணி அம்பாள் ஆலயத்தைச் சிரமதானம்செய்து, மீண்டும் கட்டியெழுப்ப ஆலய பரிபாலன சபை தீர்மானித்துள்ளதால் நாளைமறுதினம் 21.07.2002 ஞாயிற்றுக்கிழமை சிரமதானம் செய்யவுள்ளனர். ஆகவே, அனைத்து அம்பாள் அடியார்களையும் இந்த சிரமதானப் பணியில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலய பரிபாலன சபை,
இரட்டைக்கேணி அம்பாள் ஆலயம், பளை.
(6158)



## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்
## விசேட பொதுக்கூட்டம்

நாளைமறுதினம் (21.07.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் மேற்படி சங்கப் பணிமனையில் விசேட பொதுக்கூட்டம் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது குறித்த நேரத்துக்கு சமுகந்தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

- இணைச் செயலாளர்.
(6159)



## விற்பனைக்கு
செங்கற்கள்
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:-
தினேஸ் பேக்கரி
மானிப்பாய்.
(6154)



தச்சுத் தொழிலாளர்கள் தேவை.
மேலதிக விபரங்களுக்கு:
ரூவின்ஸ்
6, நல்லூர் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(6157)



## நெல்லிக்காய் லேகியம்
சிறுவர்க்கு ஏற்படும் கணச்சூடு, தேக மெலிவு, காமாலை, இரத்தசோகை, பலவீனம் என்பவற்றை நீக்கி உடல் உறுதி பேணும் ஆயுர்வேத மூலிகைகள் அடங்கியது.
வைத்திய ஆலோசனையுடன் பெற்றுக்கொள்ள -
காலை - 9 மணிமுதல் பகல் 1மணிவரை.
மாலை -3மணிமுதல் இரவு 7மணிவரை.
முருகானந்தா வைத்திய நிலையம்.
இல.72, பலாலி வீதி,
திருநெல்வேலி. (6161)



ராஜா யாழ்ப்பாணம்.
அஜித், ஜோதிகா, வடிவேல், ராதாரவி நடித்த
ராஜா
தினசரி 10.30, 2.30, 5.30
(C/22943)



நிறைஞ்சனாஸ் சங்கானை
ரஜனி, சிவாஜி, சௌந்தர்யா நடித்த
படையப்பா
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்)
(C/22941)



நாகம்ஸ் சுன்னாகம்
பிரபுதேவா, கீர்த்திரெட்டி, வடிவேல், கலாபி, விவேக் நடித்த
மனதைத் திருடிவிட்டாய்
காட்சிகள்: 11.00, 3.00 (புதிய நேரம்)



சிறந்த கூட்டுறவாளனாகக் கௌரவிக்கப்படும்
திரு.சி.சிவமகாராசா அவர்களை
(முன்னாள் தலைவர், தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.சின்னத்தம்பி சிவமகாராசா
(முன்னாள் தலைவர், தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்)

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக எமது தெல்லிப்பழை பல நோ.கூ.சங்கத்தின் தலைமைப் பணி ஏற்று அரும்பணி ஆற்றிய திரு.சி.சிவமகாராசா அவர்கள் கூட்டுறவுத்துறை அமைச்சினால்

சிறந்த கூட்டுறவாளனாக

கௌரவிக்கப்படுவதனையிட்டு அவர் பணியாற்றிய சங்கத்தவர்கள் என்று நாம் பெருமைகொண்டு அவர் மேன்மேலும் சிறப்பான பல சேவைகளைச் செய்யவேண்டுமென மனநிறைவுடன் வாழ்த்துகின்றோம். (C/22995)

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், தெல்லிப்பழை.
பணிப்பாளர்கள், பணியாளர்கள்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு. ஐ.வரதராசா
B.A., Dip. in Ed., SLPS-I

தாங்கள் 15.07.2002 அன்று அதிபர் சேவையில் இருந்து ஓய்வுபெறுவதை அறிந்தோம். நீண்டகால நிம்மதியான வாழ்வுக்கு எமது இனிமையான வாழ்த்துக்கள்.

மகன்மார்:- வ.வைகுந்தன் (கனடா), வ.கஜீபன் (இந்தியா). மைத்துனன்மார்:- கு.சிவராசா குடும்பத்தினர் (கனடா), கு.சிவாகரன் குடும்பத்தினர் (கனடா), கு.சிவரூபன் குடும்பத்தினர் (சுவிஸ்), தம்பி ஐ.ஜீவராசா குடும்பத்தினர் (நோர்வே). (6155)



## பிற்போடப்பட்டுள்ளது
அல்வாய் இளைஞர் சனசமூக நிலையத்தினரால் இன்று (19.07.2002) நடத்தப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணங்களினால் 22.08.2002 வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது.
அல்வாய் இளைஞர் ச.ச.நிலையம், - செயலாளர்.
மாலுசந்தி, அல்வாய். (C/22994)



## கண்ணீர் அஞ்சலி
பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின்
உத்தியோகத்தர் திரு.ஆ.முருகேசு அவர்களின்
பாசமிகு தந்தையும்
திருமதி மனோகரி சொக்கலிங்கத்தின் அன்புப் பேரனுமான
அமரர் மரியாம்பிள்ளை ஆறுமுகம்
(பளை, அரசர்கேணி)

அவர்களின் மறைவையிட்டு துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை. (6160)
தலைவர், செயலாளர்,
உறுப்பினர், உத்தியோகத்தர்,
ஊழியர்கள்.



## மரண அறிவித்தல்
### திருமதி சதாசிவம் யோகம்மா

மடத்துடி மேற்கு வீதி, சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி சதாசிவம் யோகம்மா அவர்கள் நேற்று (18.07.2002) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நடேசமூர்த்தி (ஹொலண்ட்), லண்டனில் வசிக்கும் கிருஷ்ணமூர்த்தி, பாஸ்கரமூர்த்தி, சத்தியமூர்த்தி, ஈஸ்வரமூர்த்தி, கணேசமூர்த்தி (கனடா) மற்றும் சாவகச்சேரியில் வசிக்கும் சந்திராதேவி, சர்வேசமூர்த்தி (ராசன்), சுசீலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.சதாசிவம் (கணவர்-ராசா)
சி.கனகரத்தினம் (கிராம உத்தியோகத்தர்)

'மேழிச் செல்வம்'
மடத்துடி மேற்கு வீதி,
சாவகச்சேரி. (6164)

## 'இசற்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிருந்தது. அந்தப் பரீட்சையில் நான்கு பாடங்களுக்குத் தோற்றியவர்களும் 3 பாடங்களுக்குத் தோற்றியவர்களும் இருந்ததால் எதிர்ப்புக் கிளம்பியது என்றும் -

இந்தப் பரீட்சையில் 3 பாடங்களுக்குத் தோற்றியவர்களே இருப்பதால் எதிர்ப்புக் கிளம்பக் காரணம் இல்லை என்றும் -

'இசற்' முறையிலான அனுமதியில் ஏற்பட்டுள்ள பாதக, சாதக நிலை குறித்துத் தாம் ஆராய்ந்து வருவதாகவும் - கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம-3)

## விடியோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரிடம் இந்தக் கைப்பையைக் கையளிக்கும்படி கைப்பையைத் தயாரித்த நிறுவனத்துக்கு கடிதம்மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இது போன்ற தகவல்கள் ஜனாதிபதி செயலகத்திலிருந்து கிடைத்த ஆவண[illegible] மூலம் தெரியவந்திருக்[illegible]மச்சர் ரவி கருணா[illegible]டார்.

[illegible]சரவைப் பேச்சாள[illegible] கூறுகையில் - மேற்படி ரகக் கைப்பை ஒரு கோடி 2லட்சம் ரூபா பெறுமதியானது என்று கூறப்படுகின்றது. ஜனாதிபதியுடன் தொடர்புடைய இந்த விடயம் பற்றி விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன - என்றார். (ம)


**அறிவித்தல்**

தவா ஆசிரியரின் கணக்கீட்டு வகுப்புகள் நாளை (20.07.2002) சனிக்கிழமையிலிருந்து வழமையான நேர அட்டவணையின்படி நடைபெறும்.

ஆசிரியர்
S.தவா
B.Com.(Hons Acc.SPL) (6149)



**சயன்ஸ் சென்ரர்**
நெல்லியடி.

பௌதிகவியல்
அலகு ரீதியான மீட்டல்
வினா விடை வகுப்புகள்
ஆரம்பம்: 20.07.2002
சனி 4.00 மணி (ப.நே.)
ஆசிரியர்:
திரு.சந்திரப்பிரகாஷ்
குறிப்பு:-
இரசாயனவியல் வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- நிர்வாகி.
(6141)


# யுத்தநிறுத்த உடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர் பீரிஸ் கூறினார்.

"பேச்சு ஆரம்பமாகாமல் இழுத்தடிக்கப்படுகின்றது. இன்னும் உறுதியான திகதி அறிவிக்கப்படவில்லை. இந்த நிலையில், ஒப்பந்தத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என சில தரப்புகள் வற்புறுத்துகின்றனவே. அதனால் ஒப்பந்தம் மீளாய்வு செய்யப்படுகின்றதா? பேச்சு தாமதமாவதற்கும் அதுவா காரணம்?" - என்று அமைச்சர் பீரிஸிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

"இல்லை, ஒப்பந்த மீளாய்வுக்கு அவசியமே இல்லை.

"பேசுவதற்கு முன் எதைப்பற்றிப் பேசப் போகின்றோம், எப்படிப் பேசப் போகிறோம், அவை மறுக்கப்பட்டால் மாற்றுத் திட்டம் என்ன, அதற்கு ஈடான மாற்று யோசனைகள் என்ன, எதை முதலில் பேச்சுக்கு எடுப்பது என்பன போன்ற அட்டவணையைத் தயாரிப்பதில்தான் தற்போது ஈடுபட்டுள்ளோம்.

"நோர்வேப் பிரதி அமைச்சர் விடர் ஹெல்கிஸன் இருபக்கத்தாருடனும் தொடர்புகொண்டு இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

தற்போதைய நடவடிக்கைகளில் நாம் திருப்தி அடைகின்றோம். பேச்சு தாமதமானால் பாதகம் இல்லை. அது இடைநடுவில் முறிந்து விடக்கூடாது என்பதில் தான் நாம் அக்கறையாக இருக்கின்றோம். 18 வருட யுத்தத்திற்கு ஓரிரவில் தீர்வு கண்டுவிட முடியாது. நிரந்தரத் தீர்வை ஏற்படுத்த சற்றுத் தாமதம் ஏற்படத்தான் செய்யும்.

"இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தால் இன்று நாட்டில் சமாதானம் நிலவுகின்றது. குண்டுவெடிப்புக்கள் இல்லை. உயிர் இழப்புக்கள் இல்லை. மக்கள் சந்தோசமாக இருக்கின்றனர். ஆசியாவில் வல்லரசான இந்தியாவும், உலக வல்லரசான அமெரிக்காவும் சிறிய நாடான இலங்கையுடன் வர்த்தக உடன்படிக்கைகளை செய்ய முன்வந்துள்ளன. இது ஒரு பெரிய வெற்றி. இல்லையா?" -

என அமைச்சர் பீரிஸ் கேட்டார்.

## இந்தியாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்று அவர் வெற்றிபெற்றார்.

இந்திய ஜனாதிபதித் தேர்தலில், தேர்ந்தெடுக்கப்பட்ட 4ஆயிரத்து 785 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும சட்டமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

174 வாக்குகள் செல்லாதவை என்று அறிவிக்கப்பட்டுள்ளன. லஷ்மி சாதல் 459 வாக்குகளைப் பெற்றார்.

புதிய ஜனாதிபதியாக எதிர்வரும் 25ஆம் திகதி அப்துல் கலாம் பதவியேற்றுக்கொள்வார். தற்போது ஜனாதிபதியாகப் பதவிவகிக்கும் கே.ஆர். நாராயணனின் பதவிக்காலம் எதிர்வரும் புதன்கிழமையுடன் முடிவுக்கு வருகின்றது. (ம)


**BRIGHTMAN**
பிறவுன் வீதி, நீராவியடி, யாழ்நகர்.
சரளமாக உரையாட
பிரிவு 8
சிங்களம்
சிங்கள வரிவுரையாளர்:
By: லீலாக்கிருஸ்ணன்
ஆரம்பம்: 20.07.2002 Sat 8.30 a.m.
(6125)



**நாளைமுதல்**
எதிர்பார்க்கை
வினாத்தாள்களுடன்
எழுதுநர் சேவை
போட்டிப் பரீட்சை
வழிகாட்டி நூல்.
ஆக்கியோன்:-
திரு.P.உமாசங்கர்
சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.


## நெடுங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜே-61 கிராம சேவையாளர் பிரிவு கடற்கரையை அண்டியுள்ளதால் பாதுகாப்புநிமித்தம் அங்கு மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கமுடியாது என்றும்-

ஜே-62 கிராம சேவையாளர் பிரிவில் மக்கள் மீளக்குடியமர முடியும் என்றும் - படைத் தரப்பினால் தெரிவிக்கப்பட்டது.

இந்த முடிவு தொடர்பாக ஆராய்வதற்காக கொழும்புத்துறை இலந்தைக்குளம் பிள்ளையார் ஆலயத்தில நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவிருக்கின்றது.

அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களை இக்கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-3)


எமது ஒரிஜினல் விடியோ /CD வெளியீடு
☆ சாமுராய் ☆
பிரதிகள் மதியத்துக்கு பின்னர் பெற்றுக்கொள்ளலாம்.
விடியோ விமல்
(C/22997) யாழ்ப்பாணம்.


# வாகனக் கொள்வனவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜோன் அமரதுங்க, மஹிந்த சமரசிங்க, ரவி கருணாநாயக்க ஆகியோர் அடங்கிய - அமைச்சரவை உபகுழு தனது ஆய்வறிக்கையை அமைச்சரவையில் சமர்ப்பித்தது.

ஜனாதிபதியின் மேற்படி கொள்வனவுக்கு இலங்கை வங்கியிடமிருந்து 240 கோடி 90 லட்சம் ரூபா கடனாகப் பெறப்பட்டிருக்கிறது. இதுபற்றி அமைச்சரவைக்கோ நாடாளுமன்றத்துக்கோ எதுவும் தெரியாது. இலங்கை வங்கியிடம் பெறப்பட்ட கடன் தொடர்பாக நிதிக் கேள்விப்பத்திர முறைகளும் பின்பற்றப்படவில்லை. கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களின் விலைகளும் சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.

ஜேர்மனியில் தயாரிக்கப்பட்ட 'பி.எம்.டபிள்யூ.' மற்றும் 'மேர்ஸிடஸ்' ரக வாகனங்களே கொள்முதல் செய்யப்பட்டதாக இறக்குமதிப்பத்திரங்கள் கூறுகின்றன.

ஆனால், இங்கு வந்து சேர்ந்திருக்கும் வாகனங்களோ மிகவும் மட்டரகமானவை. ஹொங்கொங், இந்தோனேசியா, கொரியா ஆகிய நாட்டுத் தயாரிப்புகள்.

இந்த வாகனங்கள் குறித்து ஜனாதிபதி ஊடகங்களுக்கு வழங்கிய படங்களில் கொரியன் தயாரிப்பு 'டைவூ' கார்கள் காணப்பட்டன. தனது மோசடிக்கு ஜனாதிபதியே ஆதாரம் வழங்கியிருக்கிறார்.

சுங்கத் திணைக்களம், துறைமுகம், வாகனங்கள் பதிவுத் திணைக்களம் ஆகியவற்றில் இதுபற்றி விசாரித்தபோது தகவல்கள் வெளியாகின. இவை ஜனாதிபதியிடமும் கையளிக்கப்பட்டுள்ளன.

ஆனால், இந்த ஆய்வறிக்கை குறித்து தன்னால் உடனடியாகப் பதிலளிக்கமுடியாது என்றும், தனக்கு ஒரு வாரகால அவகாசம் வேண்டும் என்றும் ஜனாதிபதி கூறியிருக்கிறார் - என்றார் பீரிஸ்.

இந்த விவகாரம் நேற்றுமுன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டபோது, ஜனாதிபதிக்கும் அமைச்சர்கள் ரவி கருணாநாயக்க, ராஜித சேனாரட்ண ஆகியோருக்கும் இடையில் கடும் வாக்குவாதங்கள் இடம்பெற்றன என்று அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

ஜனாதிபதி மாளிகைக்கு வந்து கொள்வனவு செய்த கார்களைப் பார்க்கும்படி ஜனாதிபதி பிரதமருக்கு அழைப்பு விடுத்திருப்பது பற்றி அமைச்சர் பீரிஸ் கருத்து வெளியிடுகையில் -

பிரதமருக்கு இயந்திரவியல் எல்லாம் தெரியாது. அவருக்கு சட்டத்துறை தானே தெரியும். அப்படியே பிரதமர் சென்று வாகனங்களைப் பார்த்தாலும் மோசடிகளும், தில்லுமுல்லுகளும் தீர்ந்துவிடா. மோசடிகளுக்குப் பரிகாரம் காணும்வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றார்.

## செம்மணன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக் குழுவினர் இன்று முற்பகல் 10 மணிமுதல் 4 மணி வரை செயலகத்தில் தமது கடைசி அமர்வை நடத்தவிருக்கின்றனர்.

நாளை காலை கொழும்பு செல்லும் ஆணைக்குழுவினர், நாளைமறுதினம் முதல் 24ஆம் திகதி வரை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் விசாரணை அமர்வுகளை நடத்தவிருக்கின்றனர். (ம-3)


**MOUSE (Pvt) Ltd.**

எமது நிறுவனத்தினரால் நடத்தப்படவிருக்கும்

- Dip. in Desktop Publishing
- Dip. in Grapic Design
- Dip. in Marketing

(கற்கை நெறிகளுக்கு விண்ணப்பித்த அனைவரையும் நாளை (20.07.2002) சனிக்கிழமை 10.00 மணிக்கு இணுவிலில் உள்ள எமது காரியாலயத்திற்கு சமுகந்தரவும்.)

✦ விண்ணப்பிக்கத் தவறியவர்களும் சுயவிவரக்கோவையுடன் அதே தினத்தில் 12.00 மணிக்கு எம்மைச் சந்திக்கலாம்.

(✲ போரினால் தாய்/தந்தையை இழந்த மாணவர்களுக்கு இலவசமாகக் கற்பிக்கப்படும். வேலை வாய்ப்பிலும் முன்னுரிமை வழங்கப்படும்.)

K.K.S. றோட்,
இணுவில் மேற்கு,
இணுவில் (இணுவில் மத்திய கல்லூரிக்கு அருகில்). - நிர்வாகம். (6134)



**இலவச கணனி பயிற்சி நெறி**
இறுதிப் பிரிவு ஆரம்பம்

20.07.2002 2.00 pm
27.07.2002 9.30 am

இவ் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அல்லது சுயமாக தயாரித்து கீழ் காணும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பவும்.

APPLICATION FORM

Full Name :..............................
Address :..............................
Date of Birth:..............................
Course Detail:-..............................
Date. Signature Of Applicant

உத்தியோகஸ்தர்களுக்கும் மாணவர்களுக்கும் முன் வகுப்புகள் ஆரம்பம் -2002 4.00pm

Diploma in Microsoft Office
Introduction to Computer
MS Word XP MS Excel XP
MS Access XP MS Outlook XP
MS Power point XP Photo Draw XP

Diploma in Computer Programming
Introduction to Computer MS Windows XP
Programming Techniques MS Word XP
MS Access XP Visual Basic
C++ E-Mail &Internet
HTML Programming

Certificate Course
MS Word XP MS Excel XP
MS Access XP Auto CAD
Visual Basic Visual FoxPro
Corel Draw

அனைத்து பயிற்சி நெறிகளுக்கும் அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன !

யுகவாணர், இல.07,பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

JAFFNA TECHNICAL INSTITUTE
JAFFNA, SRI LANKA
Branch. No.07, Palaly Road, Jaffna.
Head Office. No.11/108, Stanley Road, Jaffna.



New opportunity for Computer Studies
File Edit View Favorites Tools Help
Stop Refresh Home Search Favorites History Mail Print
Address http://www.barbara.com/ Go Links

The Barbara Mulvaney
Computer Training center
123, Temple Road, Jaffna

புதிய பிரிவுகள் ஆரம்பம்

Diploma Courses
Diploma in Microsoft Office (4 months) | Diploma in Photo Graphic (3 months)
Diploma in Desktop Publishing (4 months) | Diploma in Programming (4 months)
Diploma in Information Technology (4months) | Diploma in Kids Course (3 months)
Diploma in Software application (4months) | Diploma in Studio Designing (3 months)



Certificate Courses
Auto CAD 2000 | Adobe Page Maker 6.5
Corel DRAW 9 | Microsoft Word
Adobe Photo shop | Microsoft Access
Microsoft Excel | Microsoft Visual Basic 6

Kids Courses
Batch I - age 5 - 10
Batch II - age 11 - 15

வகுப்புக்கள் யாவும் 25-7-2002 அன்று ஆரம்பமாக இருப்பதால் 25-7-2002 இற்கு முன்வர் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும் நிர்வாகம்

My Computer


[illegible]பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.07.2002இல் அச்சிட்டு [illegible]வெளியிடப்பெற்றது.